
# நங்கை

இதழ் 10. 1994



NANGAI WOMEN'S MONTHLY JOURNAL

# நங்கை

ஆசிரியர்:

சரோஜா சிவச்சந்திரன்
B.A. Hons (Cey), M.A. (jaf)

வெளியீடு:

மகளிர் அபிவிருத்தி நிலையம்,
07, இரத்தினம் ஒழுங்கை,
கே. கே. எஸ் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அச்சமைப்பு:

'மணி ஓசை'
12, சென்பற்றிக்ஸ் வீதி யாழ்ப்பாணம்.

தனிப்பிரதி: ரூபா 15.00

ஆண்டுச் சந்தா: ரூபா 150.00
(தபாற்செலவு உட்பட)

வெளிநாடு: (தபாற்செலவு உட்பட)

தனிப்பிரதி: ரூபா 45.00

ஆண்டுச் சந்தா: ரூபா 540.00

சந்தா: காசுக் கட்டளையாகவோ, தபாற் கட்டளையாகவோ ஆசிரியரின் பெயருக்கு, தபாற்கந்தோர் நீரா வியடி எனக் குறிப்பிட்டு அனுப்புக. காசோலையாகவும் அனுப்பலாம்.

இதழ்: 10 - 94

---

✳ அடுத்த 11 வது இதழை சிறப்பிக்க கதை, கட்டுரை, கவிதை, துணுக்கு களையும் உங்கள் கருத்துக்களையும் 31-05-94 முன் அனுப்பி வையுங்கள்.

✳ குடும்ப ஆண்டை சிறப்பிக்கும் நங்கையரே, குடும்பத்தில் ஏற்படும் அனுபவங் களையும், பொறுப்புக்களையும் புரிய வைக்கும் உங்கள் ஆக்கங்களால் அடுத்த இதழை அழகுபடுத்துங்கள்.

---

Nangai - Women's Monthly Magazine.

Publishers— **Centre for Women and Development**
07, Ratnam Lane, off K. K, S Road Vannarpannai,
Jaffna, Sri Lanka.

Editor — **Saroja Sivachandran**, B. A, Hons (Cey), M.A.

---

அடிமை விலங்கொடிக்க அணிதிரளும் நங்கையரே!
குடும்ப ஆண்டின் குலவிளக்காய் ஒளிகொடுப்போம் வாரீரோ!

அட்டைப்படம்: ''தவம்''

# குடும்ப நல ஆண்டு கூறுவதென்ன...

நமது நாளாந்த வாழ்வு அதற்குப் பெருமையூட்டும் பரோபகார சிந்தனை, அன்பின் மகிமையை புரிந்து கொள்ளல் இவற்றின் வெளிப்பாட்டை உணர்த்தும் வகையில் ஐ.நா 1994-ம் ஆண்டை சர்வதேச குடும்ப ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. சமூக இழையைப் பலப்படுத்துவதற்கு குடும்பமே உயிர் நாடி போன்றது. இன்று விரைவாக மாறிவரும் உலகில் குடும்ப நலப் பொறுப்புக்கள் நலிவடைந்து வருகின்றன. இவற்றைத் தளர்ச்சியடையாமல் பாதுகாக்க வேண்டியது எமது கடமையே.

இன்றைய சூழ்நிலையில் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை உருவாக்குவதென்பது இலகுவான காரியமல்ல. துன்பங்கள், இழப்புக்கள், பயங்கரமான சம்பவங்கள், மனநெருடல்கள், பிரிவுகள், பொருளாதார நெருக்கடிகள் என்பன தாராளமாகவே உள. இவையாவும் குடும்ப உறவுகளைப் பாதிக்கும் நிகழ்வுகளே. உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டு வரும் கால கட்டத்தில் சிறிதும் பெரிதுமாக பல நூறு பிரச்சனைகள், வேறு பிரிவினை உணர்வுகள், கொச்சை அரசியல், வறுமை குறைந்த பொருளாதாரம், இடப்பெயர்வின் அவலங்கள் இவையெல்லாம் சமாளிக்க முடியாத பிரச்சினைகளாக உருவெடுக்கப் போகிறது. இவற்றின் அபாயங்களைப் பற்றி பிரக்ஞையேயில்லாது சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கு தகுந்த தளமாக இவை அமையப் போவதில்லை. அன்போ, புரிந்துணர்வோ அன்றி உண்மையான ஒற்றுமையோ குடும்பங்களில் பெரிதாக இல்லை. பெண்கள் வாழ்வில் உயிர் நாடியாக விளங்குகிறார்கள், புதிய நம்பிக்கையுடன் இன்று சமூகத்தில் வாழத்துடிக்கின்றனர். ஆனால் இன்னும் சமயலறைக் கைதிகளாக, கணவன்மாரின் களைப்பை நீக்கும் பதுமைகளாகக் கணிக்கப்படும் நிலைகூட மாறியதாகத் தெரியவில்லை. போர்கள் நாடுகளிலும், மக்கள் மனதிலிருந்தும் முடிவடையப் போவதில்லை. நாம் ஒவ்வொருவரும் தீய சக்திகளின் மூல வேர்களைக் கண்டு அவற்றிற்கு எதிராகக் குரல் கொடுக்கும் வரை இவை முடியப் போவதில்லை. போர்க் கலாச்சாரத்திலிருந்து அப்பாற் செல்லவைக்கக்கூடிய சக்தி கல்வி ஒன்றிற்கு மட்டுமே உளது.

சர்வதேச குடும்ப ஆண்டு நாம் பலாத்காரத்தின் மூலம் கைவிடப்பட்ட பெண்கள், சிறுவர், இடம்பெயர்ந்தோர் இவர்கட்கிடையில் சகிப்புத் தன்மையோடு கூடிய ஓர் இணைப்பை ஏற்படுத்த எமக்குக் கிடைத்த சந்தர்ப்பமாகக் கருத வேண்டும்.

சமூகத்தில் எமது நிலை எப்படியிருப்பினும் எமது நடத்தை மூலம் பெறுமானங்களை நிலைப்படுத்தல், சகிப்புத்தன்மை, மற்றவர்களை மதித்து நடத்தல், சகோதரத்துவத்தின் மகிமையை உணர்தல் போன்றவற்றைச் செயற்படுத்த எமக்கும் ஓர் பங்குண்டு. இல்லாண்டில் சமாதான கலாச்சாரத்திற்கான முன்னேற்றத்தை விரிவாக் நாம் எல்லோரும் முனைவோமாக.

# பேராசிரியர் அ. துரைராஜா

அவர்களுக்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம் வளங்கிய

# சேவை நலம் பாராட்டு

நிறையுடை அறிவால் அன்பால்
நிகரிலாச் செயலால் என்றும்
கறைபடாத் தொழிலால் பண்பால்
திறந்த பல்கலைக் கழகம் போன்றீர்
நறையுடைச் செழுந் தாதுள்ள
நறுமலர் போல் மலர்ந்து
பொறையுடன் ஆற்றும் சேவை
தொடர்ந்திடத் துணையாய் நிற்பீர்
உறைந்திடும் பனி போல் உள்ளம்
பளிங்கெனத் தூய்மை காட்டக்
குறைந்திடும் வசதி ஒன்றே
குறைவற்ற இன்பம் ஆக்கி
அறந்தனில் நிலைத்து நின்று
அறிஞர்க்குத் துணையாய் என்றும்
சிறந்த நற் சேவை செய்தீர்
சீரிய நின் சேவை வாழ்க

கறங்கு போற் சுழன்று நின்று
காதவழி போய் அலைந்து
திறந்த மனத் துணிவினோடு
திக்கெட்டும் குரல் கொடுத்துத்
திறம்பட வெளிவாரி மற்றும்
புறநிலைப் படிப்பும் கொண்டீர்
திறந்த பல்கலைக் கழகம் தனிலும்
தொடர்க நின் சேவை என்றும்
ஆய்வுகள் செய்யும் நோக்கில்
துணை வேந்தர் நிதியம் பேணிப்
போரிலும் கல்வி மேன்மை
துலங்கிடத் துணையாய் நின்று
சாய்ந்திடும் சமூகம் தன்னைச்
சரிநிகர் சமானம் ஆக்கும்
சீரிய பணிகள் செய்த
வித்தகா நீடு வாழ்க!

சீறுசல் ஒழிந்து கண்ணால்
சிரித்திடும் முகமும் கொள்கை
மாறுதல் கொள்வோர் தம்மை
மனமறிந்து இதமாய் பேசும்
பேறுடைச் செம்மலே உம்
பெரும் புகழ் என்றும் ஓங்க
நூற்றாண்டு காலம் வாழ்க!
வேந்தனே நீடு வாழ்க!!

**யாழ்** பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் நிலைத்த சேவை யாற்றி, திறந்த பல்கலைக் கழகம் செல்லும் யாழ்/ பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் சேவையை கௌரவித்து மகளிர் அபிவிருத்தி நிலையம் ஓர் தேனீர் விருந்துபசாரத்தை 25. 0 . 91 புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு மகளிர் நிலையத்தில் நடத்தியது. மகளிர் அபிவிருத்தி நிலைய அங் கத்தவர்கள் பல் துறை சார் நிறு வனங்களின் தலைவர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள், அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள், வங்கி அதிகாரிகள் பத்திரிகை துறைசார்ந்தோர் கலந்து கொண்டு சிறப்பித்த இந் நிகழ்வு, மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பெருமையினை வெளிக்காட்டுவதாக அமைந்தது.

பேராசிரியர் துரைராஜா அவர் கட்கு யாழினி, பாரதி, மாலை அணிவிக்க, நிலைய முன்றலிலி ருந்து மகளிர் மலர் தூவி அழைத்து வரப்பட்ட காட்சி மனதை நிறைவு செய்வதாக அமைந்தது. பேராசிரியர் அவர்கள் மங்கள விளக்கேற்றியதும் திரு. ஜெயராமன், வேல்மாறன், கண்ணதாசன் குழுவினரின் வய லின் இசை மழை பொழிய நிகழ்வு கள் இடம்பெற்றன. திருமதி. சரோஜா சிவச்சந்திரனின் வரவேற் புரையைத் தொடர்ந்து. சங்கீத பூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்கள் 'வாழ்த்துப்பா' பாடி பேராசிரியர் அவர்களை கௌரவித்தார். திருமதி பத்தினி யம்மா திலக நாயகம் போல், திருமதி கோகிலா மகேந்திரன் செல்வி புஸ்பா செல்வநாயகம், திருமதி சிவப்பிரகாசம் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, திரு. க. கனகராஜா, மல்லிகை ஜீவா ஆகியோர் நிகழ்வில் உரை

# பெண் ஒடுக்கு முறையில் பலாத்காரத்தின் வடிவங்கள்

★ சரோஜா சிவசந்திரன்

பெண்களின் சமத்துவம்பற்றி அதிகமாக பேசப்பட்ட போதிலும் பெண் ஒடுக்கு முறையின் பல வடிவங்கள் மெய்யாகவே இன்றும் மறையவில்லை. தேச விடுதலையில் பெண்கள் மகத்தான பங்களிப்பை ஆற்றி உரிமைப் போராட்டங்களில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த போதிலும் மனித வாழ்வில் முழுமையான உரிமைகளை அனுபவிக்க முடியாத நிலையிலேயே உள்ளனர். குடும்பத்தில் ஆண் பெண் இருவரும் சரிநிகர் என்ற நிலைப்பாட்டை உறுதி செய்து பெண்ணுக்குரிய சரியான தளத்தை முழுமையாக உணாச் செய்வதே இன்றைய தேவைகளில் ஒன்றாக உள்ளது. பெண்கள் மகிழ்ச்சியுடனும் சமத்தவத்துடனும் வாழ உரிமை பெற்றவர்கள். இந்த சமூகம் தான் அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். பெண்களுடைய திறமைகள் இன்று வெளிக் கொணரப்பட்டு அவர்களின் சமுதாய ஈடுபாடு அதிகரித்துள்ள போதிலும் அதற்கேற்ப ஆணாதிக்கத்தின் வடிவங்களின் போக்கும் காலா காலம் மாற்றமடைந்து வருவதையும் அவதானித்தல் வேண்டும். வெளி உலகில் பெண்களுக்கு அளிக்கப்படும் கௌரவமும் சமத்துவமும், குடும்ப மட்டத்தில் பேணப்படுவதில்லை.

ஆணாதிக்கத்தையும், கொடுமைகளையும் எதிர்க்கும் மனப்பக்குவம் பெண்களிடம் குறைவாகவே காணப்படுகிறது. ஆண்களால் ஒடுக்கி வைக்கப்படுதல், ஆண்களின் வன்முறைகள் யாவும் தங்கள் விதிப்பயன் என்று சகிப்புத் தன்மையுடன் வாழ்நாள் முழுவதும் அல்லல்படும் பெண்கள் இன்று ஏராளம். அவலங்களை நான்கு சுவர்கட்கு வெளியே அம்பலப்படுத்தக் கூடாது. என்பது மரபாகிவிட்டது. பெண்களின் கல்வி, பெண்கள் அவற்றை எதிர்த்துப் போராடும் ஆயுதமாக, பொது அறிவு, கல்வி தமது பொருளாதார சமூக அந்தஸ்த்தை நிலைநாட்டும் கருமங்களில் முன்னேற்றம் என்பன ஏற்படக் கூடிய ஓர் அமைதியான புரட்சி இன்று அவசியமாகின்றது.

பெண்ணியம் என்ற வார்த்தை பெண் விடுதலை பெறுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கு அப்பாற்பட்ட பல சீர்திருத்தங்களையும் உள்ளடக்கிய ஆழமான அர்த்தத்தினைக் கொண்டது. ஆண் பெண் சமத்துவ முரண்பாடு, குடும்பத்தில் ஆணாதிக்கத்தின் போக்கு, பெண்ணின் சுமைகளின் அதிகரிப்பு, கலாசார ரீதியில் பெண்ணின் தாழ்ந்த நிலை இவை யாவும் மறந்துவிடக் கூடிய விடயங்களல்ல.

இன்று ஏற்பட்டு வரும் விடுதலை உணர்வு பெண்களை வருத்தி வரும் சகல அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். நாம் வாழும் நெருக்கடியாக,

---

பாராட்டு விழாவின் தொடர்...

ஆற்றினர் மகளிர் அபிவிருத்தி நிலையப் பேராசிரியர் அவர்கட்கு 'விருது' ஒன்றை அளித்து கௌரவித்தது.

பேராசிரியர் துரைராஜா அவர்கள் தமது உரையில் பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பல சிக்கலான பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, இதனை கல்வியில் முன்னேற்றம் ஏற்படுத்துவதன் மூலமே சுமுகமாக தீர்க்க முடியும் என்பதை வலியுறுத்திக் காட்டினார் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆற்றிவரும் வேலைகளை பாராட்டிய பேராசிரியர் அவர்கள் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆற்றவேண்டிய பல சேவைகளின் தேவை அதிகமாக உள்ளது அவற்றை முனைப்பாக ஆற்றுவதோடு, சிறந்த ஓர் நிலையமாக இந் நிலையம் தமிழீழத்தில் நிலைபெற வேண்டும் என்றும் தெரிவித்தார். □

காலகட்டத்தில் பெண்களின் விடுதலை உணர்வுகளும் முன்னணிக்கு வந்துள்ளமை முக்கிய ஓர் மாற்றமே. உலகளாவிய ரீதியில் பெண்கள் இயக்கங்கள். தம்மை தேசிய அரசியல் விவகாரங்களில் இணைத்துக் கொள்ளும் போக்கு இடம் பெற்று வருவது விரைவான விடுதலைக்கு இடும் அடித்தளமாக அமையும்.

இவ்வாறான மாற்றங்கள் போக்குக்கள் யாவும் ஆணாதிக்கத்தின் மேல் விழும் ஓர் அச்சுறுத்தலாக அமைகின்றது. இவ்வச்சுறுத்தல்களின் வடிவங்கள் இன்று பல உருவில் வெளிவருகின்றன. உலகளாவிய ரீதியில் குடும்ப வன்முறைகள் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளதோடு இவற்றின் வடிவங்களிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன. ஆண்களின் வக்கிரத்தன்மை பெண்கள் விடயத்தில் மட்டுமல்ல சிறுமியரைக் பாலியல் வன்முறைக்குள்ளாக்கும் அளவிற் மோசமடைந்துள்ளது. குடும்பத்தில் ஏற்படும் வன்முறை சம்பவங்கள் பெண்ணின் வாழ்வின் இருண்ட பகுதிகளாகவே உள. குடும்ப கௌரவம் என்ற போர்வையில் இவை மூடி மறைக்கப்படுவதனால் இவை பற்றிய தெளிவான விபரங்கள் அறிந்து கொள்வது கடினமே.

உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம், குடும்ப ரீதியில் இடம் பெறும் வன்முறைகள் சகல பெண்களுக்கும் பொதுவான ஒன்றாகவே காணப்படுகிறது. எல்லா நாடுகளிலும் எல்லாப் பிரதேசங்களிலும் சகல இன, கலாசார வேறுபாடு கொண்ட மக்களிடையேயும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் குடும்பங்களில் நிகழ்வது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சமூக ஒழுங்கமைப்பில் பாலியல் வன்முறைகள் தொடர்பாக குற்றம் இழைத்தவரை விட குற்றம் இழைக்கப்பட்டாரே அவமானத்திற்குள்ளாகும் நிலை காணப்படுகிறது. பெண்கள், தாம் குற்றம் புரிந்து விட்டோமோ என்ற குற்ற உணர்வுடன், எடுத்துக் கூறும் துணிவின்மை போன்ற சூழ்பங்களால் அமைதியாகவே குமுறுகின்றன. இதனால் உளநிலை, ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு விரக்தியடைந்த நிலையில் தமது வாழ்விற்கே முடிவைத் தேடிக் கொள்கின்றனர். சட்டங்கள் கடுமையாக்கப்பட்ட நிலையில் கூட பெண்கள் பக்கம் சார்பாக நீதி கிடைப்பதாக இல்லை. நீதி மன்றில் முறையீடு செய்தால் கூட வழக்கறிஞர்களின் சங்கடமான கேள்விகள் அவளை மேலும் தலைகுனியவே செய்கின்றன. இதன் காரணமாக பாலியல் கொடுமை இழைக்கும் பலர் தப்பி விடுகின்றனர். கொடுமைக்குள்ளாகும் பெண்களின் உரிமைக்காகப் போராடுவோருக்கு இது முடிவில்லாத ஓர் போராட்டமே.

ஒரு பெண் குடும்பத்தில் அதிகாரம் செலுத்தும் உரிமை கொண்டிருந்த போதிலும் ஆணே இல்லத் தலைவனாகவும், குடும்பத்தில் தீர்மானம் எடுப்பவனாகவும், பொருளீட்டிக் கொடுப்பவனாகவும் கருதப்படுகின்றான். மனைவி தன் பணிகளை குடும்பத்தில் செவ்வனே ஆற்ற வேண்டுமாயின் அதற்குச் சாதகமான சூழல் அமைப்பு தேவை தீர்மானம் எடுத்தல் என்பது அதிகாரத்துடன் தொடர்புடையது இந்த அதிகாரம் பெண் ஓர் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கும் அவளின் உள்ளாற்றலையும் குடும்பத்திலோ, வேலைத்தலத்திலோ அன்றி சமுதாயத்திலோ அவள் தனது கடமைகளை நிறைவேற்றக் கூடிய திறனையும் அளிக்கிற ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் சமுதாயத்தில் அகவாழ்விலும், புறவாழ்விலும் அவர்களின் அவர்கள் ஆதிக்கமே மேலோங்கி நிற்கின்றது. பெண்களைப் பொறுத்தவரை கல்வி கூட ஓர் நகர்வை ஏற்படுத்த உதவும் கருவியாக பயன்படவில்லை. பல்கலைக்கழக கல்விக்கூட சமூகமயமாதலை ஏற்படுத்தவில்லை. கல்வி சுதந்திர சிந்தனையை வளர்ப்பதில் தோல்வியே கண்டுள்ளது.

எமது பிரதேசத்தைப் பொறுத்தளவில் பெண் விடுதலை பற்றிய சிந்தனைகள் சமுதாய மட்டத்தில் பூசி மெழுகும் போக்கை காட்டுகின்றதேயன்றி குடும்ப உறவுகளில் ஏற்படும் பால் சமத்துவம், குடும்ப பொறுப்களில் சமன்பாடு புரிந்துணர்வு என்பவற்றை வளர்ப்பதாகத் தெரியவில்லை பலாத்காரங்கள் வன்முறைகள் ஒழிய வேண்டுமாயின் குடும்பத்தில் நல்லுறவு நிலவவேண்டும். இவ்வுறவை வளர்க்க பாடுபடுவோமாக. ⊓

## நயப்பு

நங்கையின் 8-93 இதழ் வாசிக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அதில் மஞ்சுளாவின் ''ஆசிய சுற்றுலாத் துறையினரின் ஆபத்தான போக்கு'' மிகமிக சிறப்பாக அமைந்துள்ளது ''கலாசாரத்தின் உயர் நோக்கில் கணிக்கப்பட வேண்டிய பெண்களும், பிள்ளைகளும், வர்த்தகப் பொருள்களாகக் கணித்து வளர்முக நாடுகளின் செல்வந்தர்களுக்கு, எமது நாட்டின் வறுமையில் மாடி வதங்கிய உடல்களைப் பலியாக்கி டணம் தேடிக் கொள்வதையும், அத்தோடு உலக சுகாதார ஸ்தாபனத்தின் கண்மூடித்தன போக்கினால் எயிட்ஸ் போன்ற நோய்பரம்பல் எற்படுவதற்கும் எதுவாகிறது.

கருத்தாழம் கொண்ட இவ்வாக்கம் சுற்றுலாத் துறையினரின் இலைமறைகாயாக உள்ள இரகசியங்களை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டியமை மிகமிக வரவேற்கத் தக்கது. அவர்களுக்கு பேரதிர்ச்சியையும் கொடுக்க வல்லது.

பொருளாதார நெருக்கடி சமூகத்தில் பெண்களினம், பிள்ளைகளினதும் வாழ்க்கையை எப்படி சீர்குலைகின்றது என மிகமிகத் தெளிவாக எடுத்துக்காட்டி பொருளாதார மேம்பாட்டை சரியான பாதையில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.

இத்தகைய ஆக்கங்களுக்கு ஊக்கமளித்து நங்கை நல்லாள் நாலு திசையும் தலை நிமிர்ந்து வீரமுடன் நடைபோட்டு நலமுடன் நறுமணம் வீசும் நன்மலராய் திகழ என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

சீ. சண்பகா தேவி

## காதல் தோன்றுவது இதயத்திலா மூளையிலா ?

என் இதயத்தை திருடிவிட்டாய் என்கிறான் காதலன். நெஞ்சத்தைக் கிள்ளாதே' என்கிறாள் காதலி உண்மையில் காதல் பிறப்பது எங்கே? இதயத்திலா இல்லை மூளையிலா? இந்தக் கேள்விக்கு அவ்வளவு சுலபமாக பதில் சொல்லிவிட முடியாது என்கிறார் பிரபல இதய அறுவைச் சிகிச்சை நிபுணரான டாக்டர் சாலமோன் விக்டர். காதல் என்ற பொறி மூளையிலிருந்து தான் ஆரம்பிக்கிறது என்றாலும் அந்த நினைவு உண்டாகும் விளைவுகளை உடல் முழுக்க உணர்கிறது என்கிறார் இவர். இதயத்துடிப்பு உடனடியாக அதிகரிக்கிறது. கண்கள் மற்றும் தோல் போன்ற உறுப்புக்களின் செயல்திறன் அதிகரிக்கிறது நாளமில்லா சுரப்பிகள் சில குறிப்பிட்ட ஹர்மோன்கள் அதிகமாகச் சுரக்க ஆரம்பிக்கின்றன. உச்சக்கட்டமான உடலின் செயல்களிலிருந்து அணுக்களின் (Atoms) சிறு கூறுகள் தங்களுக்குள் பரிவர்த்தனை (Transfar) ஆகின்றன. மூளை மற்றும் இதயத்தின் அணுக்களிடையே இது நடை பெறுகிறது. ஆகவே காதல் உணர்வு என்பது உடல் முழுக்க நடை பெறும் சம்பவம் என்கிறார். டாக்டர் சாலமோன் விக்டர். காதல் வசப்பட்டவரின் இதயத் துடிப்பு அதிகரிக்கிறது என்றால் அது இதயத்தின் தன்னிச்சையான செயல் அல்ல மூளையின் ஆணைக்குக் கட்டுப்பட்டே இந்த செயல் நடக்கிறது என்கிறார் பிரபல நரம்பியல் வல்லுனரான டாக்டர் லோகமுத்துக்கிறிஷ்ணன். இதயமா, மூளையா காதலுணர்வுக்கு எது முக்கியம்?

★ ★ ★ ★

*நாங்கள் செய்ய வேண்டியதை மன உறுதி இருக்கும் போதே செய்யவேண்டும். காரணம் இந்த மன உறுதிக்கு பலவீனங்களும் தாமதங்களும் ஏற்படலாம்.*

— ஷேக்ஸ்பியர்

சிறுகதை

# கோபுரம் ஒன்று சரிகிறது

★ ராமண்ணா

தர்மலிங்கம் மாஸ்ரர் தபாற்காரனின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்து நிற்கிறார். இவ்வாறே கடந்த சில தினங்களாகக் காத்திருந்தவர் இன்றும் தன் படலையடியில் காத்துநிற்கிறார். இங்கே கடிதங்கள் வருவதில் பல சிக்கல்கள் இருந்தபோதும் தனக்கு எப்படியும் ஒருகடிதம் வரும் என்ற நம்பிக்கை அவர் நெஞ்சில் துளிர்விட்டிருந்தது. முன்பெல்லாம் அவர் இப்படிக் கடிதங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பது வெகு குறைவு. ஆனால் இப்போது கடிதத்தை எதிர்பார்த்துக் காத்து நிற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

தர்மலிங்கம் மாஸ்ரர் திருமணம் முடித்த பின்தான் அந்த ஊருக்கு வந்திருந்தார். ஆசிரியர் மாப்பிள்ளையாக அவ்வூருக்கு வந்தபடியால் அவருக்கு அங்கு இயல்பாகவே ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டிருந்தது. அதுவும் அந்த ஊரில் செல்வாக்குள்ள ஒரு குடும்பத்தில் அவர் திருமணம் செய்ததால் அவருக்குரிய மதிப்பும் சற்று இறுக்கமாகவே வேரூன்றியது. இந்த ஆரம்பநிலை அந்தஸ்த்தை மிகக் கவனமாகவே காப்பாற்றிய தர்மலிங்கமாஸ்ரர் தன் நன்நடத்தையால் தொடர்ந்தும் அதைத் தக்க வைத்துக் கொண்டேயிருந்தார்.

கல்விவளர்ச்சியில் பின்தங்கியிருந்த அந்தக் கிராமம் தர்மலிங்கம் மாஸ்ரரின் வருகையால் கல்விநிலையில் பெரும் மாற்றத்தைப் பெற்றது. அவரது பூரணத்துவமான சேவையினால் கிராமரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் அங்கே பாரியவளர்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. வறுமை நிலையில் உள்ள பிள்ளைகட்கு மாலைநேர இலவச வகுப்புக்கள் பாடசாலைக் கல்வி தவிர்ந்த பிற முறைக் கல்விகள், சமுதாய ஸ்தாபனங்கள் மூலம் அறிவுத் துறைசார்ந்த வளர்ச்சிகள் அங்கே பரிமளிக்கத் தொடங்கின. இதனால் தர்மலிங்க மாஸ்ரரின் புகழ் கொடிகட்டிப் பறந்தது. அவர் தன்னிடமிருந்த திறமைகளை வெளிக்கொணர ஒரு சந்தர்ப்பமாகவே இதைப்பயன்படுத்தி அதில் வெற்றியுங் கண்டார்.

அந்த ஊரில் காணி உரிமையாளர்களுக்கிடையில் எல்லைப் பிரச்சினை ஏற்படும் போதும், கணவன் மனைவிமார் தகராறு ஏற்பட்டுக் குடும்பம் பிரிந்திருந்தாலும் இது போன்ற ஏனைய பிரச்சினைகளுக்கும் தர்மலிங்கம் மாஸ்ரர் தலையிட்டால் மகுடிக்கு மயங்கும் பாம்புபோல பிரச்சினைகள் தீர்வது அவரது தனித்துவமான ஒன்றாகும். நன்மைக் காரியமோ, துக்கக் காரியமோ அங்கே தர்மலிங்கம் மாஸ்ரர் தலையிடாது அவ்விடயம் நடைபெறாது என்ற அளவுக்கு அவரது சேவை அங்கே தேக்கி நின்றது.

தபாற்காரர் தூரத்தே வருவது தெரிகிறது. தர்மலிங்க மாஸ்ரரின் நெஞ்சுபடபடத்தது. இன்று கடிதம் வருமா...? வந்தாலும் தனக்

குச் சாதகமாக, தான் எதிர்பார்ப்பதுபோல வருமா...? என்றுபல கேள்விகளைத் தனக்குள் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார்.

வெளிநாட்டில் நிற்கும் அவரது மகன் செந்தூரனது கடிதத்தையே எதிர்பார்த்து நிற்கிறார் மாஸ்ரர். செந்தூரன் வெளிநாடுபோய் இரண்டு வருடங்களாகியும் மாஸ்ரர் அவனது கடிதங்களை இவ்வளவு ஆவலாக எதிர்பார்த்தவரில்லை. எப்போதாவது அவனது கடிதங்கள் வந்தால் ஓய்வாக இருக்கிறபோது அவற்றை வாசிப்பார். அவனது சுகத்தை மட்டும் ஆவலாக அறிந்து கொண்டு ஏனைய விடயங்களை மனைவியிடம் விட்டுவிடுவார். பதிலும் அவராக எப்போதாவது எழுதினால் சரி.

தபாற்காரர் அவர்வீட்டை நெருங்குகிறார். அவர் எதிர்பார்த்ததுபோல அவருக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அவசர அவசரமாக கடிதத்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் போய் மூக்குக்கண்ணாடியைக் கொழுவி கடிதத்தை ஆவலோடு படிக்கிறார்.

அன்புள்ள அப்பா, அம்மா, அக்கா, தம்பி, தங்கை அறிவது!

யாபேர்க்கும், நான் இவ்விடம் நற்சுகமே இருக்கிறேன், அதுபோல் நீங்களும் இருக்க இறைவனை வேண்டுகின்றேன். நீங்கள் போட்ட கடிதம் கிடைத்தது. அக்காவின் திருமணம் பற்றி எழுதியுள்ளீர்கள். இரண்டு லட்சம் காசும், நகையும் வீடும் சீதனமும் கேட்டிருந்ததாகவும், அதற்கு நீங்கள் சம்மதித்ததாகவும் எழுதியுள்ளீர்கள. இதை எண்ண எண்ண எனக்குப் பயமாக இருக்கிறது. நான் இங்கு வந்து இன்னமும் ஒரு வேலையிலும் சேரவில்லை. என்னோடு வந்தவர்களும் அப்படியே இருக்கிறார்கள். இங்கு வேலை கிடைப்பதென்பது முயற்கொம்பாகவே இருக்கிறது. வீட்டில் ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார் என்றால் திருமணம் பேசி வருபவர்கள் ''அதிகம்'' கேட்டு வருவது யாழ்ப்பாணத்தில் வழக்கமாகி விட்டது. ஆனால் எங்கள் நிலைமை யாருக்குத் தெரியும். மேலும் இங்குள்ளவர்கள் சில தவறான வழிமுறைகளைக் கையாண்டே தங்கள் தங்கள் வீடுகளுக்குப் பெருந்தொகைப் பணங்களை அனுப்புகிறார்கள். அத்தவறான வழிகளில் ஈடுபட்டால் நாங்களும் செளிப்பாக இருக்கலாம். ஆனால் நீங்கள் எழுதியுள்ள கடிதங்களில் தவறான வழிகளைக் கையாள வேண்டாம் என்றே எழுதியுள்ளீர்கள். உங்கள் கொள்கையிலிருந்து நான் விலகமுடியாதவனாக இருக்கிறேன். அப்படியான வாய்ப்புக்கள் பலமுறை ஏற்பட்டும் நான் அதைச் செய்யமுடியாத நிலைக்கு அப்பாவின் போதனைகள் என்னை தடுக்கின்றன. நீங்கள் ஒப்புக் கொண்டால் அக்காவின் திருமணம் அடுத்த மாதமே ''ஜாம்'' ''ஜாம்'' என்று நடைபெறும். தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.



இப்படிக்கு
அன்புள்ள மகன்
செந்தூரன்,

பெருமூச்சொன்றை விடுகிறார் மாஸ்ரர். அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தனது மூத்த மகளின் திருமணத்திற்கு இவ்வளவு முட்டவரும் என்று அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இளம் வயதில் இருந்த செல்வாக்கும் மதிப்பும், முதுமையிலும் இருக்கும் என்று அவர் போட்ட கணக்கு தப்பு என்பது அவருக்கு இப்போது புரிய ஆரம்பித்தது. கிராம முன்னேற்றத்திலும், ஆசிரியத் தொழிலிலும் தன் கவனத்தைக் கூடுதலாக வைத்திருந்தாரே தவிர தன் குடும்ப ஏற்றத்திற்கான எதுவித முன் ஏற்பாட்டையும் செய்ய அவர் தவறிவிட்டார்.

திடீரென்று ஏற்பட்ட ஒரு திருமணப் பேச்சு வார்த்தையில் எல்லாம் முற்றாகியபோது சீதனமாக இவ்வளவு அதிகமாகக் கேட்டு விட்டார்கள். அவரது மகன் எழுதியதுபோல வீட்டில் ஒருவர் வெளிநாட்டில் என்றால் அதிகமான சீதனம் கேட்பதும், எதிர்பார்ப்பதும் வழக்கம் தானே. மாஸ்ரரும் எப்படியாவது மகன் அனுப்புவான் என்ற துணிவில் தான் அந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தார். ஆனால் மகனிடமிருந்தும் தொடர்ந்தும் ஒரேமாதிரிக் கடிதம் வரும் என்று அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

''தவறான வழிகளில் ஈடுபட்டே மற்றவர்கள் பணம் சம்பாதிக்கிறார்கள்'' அந்தக் கடிதவரிகளை மீண்டும் மீண்டும் படித்துப் பார்க்கிறார்.

தவறான வழி என்பது போதைவஸ்துக் கடத்துவது என்பது அவருக்குத் தெரியும். அதுபற்றிச் செந்தூரனுக்கு வெளிநாடு புறப்படு முன்னரே பல அறிவுறுத்தல்களைச் சொல்லியிருக்கிறார். பின்பும் எழுதியுள்ள கடிதங்களிலும் அதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். போதைவஸ்தின் தீமைபற்றிப் பலமேடைகளில் பேசியுள்ளார். அதனால் சொல்லொன்று செயலொன்றாக வாழ அவர் விரும்பவில்லை.

செந்தூரன் இப்படிப் பதிலை எதிர்பார்த்துப் பல கடிதங்களைப் போட்டிருந்தான். ஆனால் அத்தனை முறையும் மறுப்புத் தெரிவித்தே பதில் எழுதியிருந்தனர். செந்தூரனுக்குத் தெரியும் அப்பா தவறான வழிகளில் வரும் பணத்தை ஏற்றுக் கொள்ளவே மாட்டார் என்பது.

தர்மலிங்க மாஸ்ரர் மிகநேர்மை நாணயம் மிக்க மனிதர். அவரது வீட்டுவாசலில் ஏறியதும் சுவரில் தொங்கும் வாசகத்தின் படியே அவர் பெரும்பாலும் நடக்க முயற்சிக்கிறார். அதன்படியே நடந்தும் வருகிறார். ''உன் மனச்சாட்சிக்குத் துரோகம் செய்யாதே. மனச்சாட்சியின்படி நட. உனக்கு வெற்றி நிச்சயம்''

---

## ''சூழல் தொடர்பான தரவு வங்கி''

**Environmental Data Bank**

யேமன் (Yemen) நாட்டிலுள்ள சூழல் பாதுகாப்பு கவுன்சில் - யுனெஸ்கோவின் ஆதரவுடன் ஓர் சூழல் தரவு வங்கியினை ஆரம்பித்துள்ளது. இவ்வங்கியில் -

(அ) சூழல் சம்மந்தமான பொது நிறுவனங்களினால் செய்யப்பட்ட ஆய்வுகள் · அறிக்கைகள் போன்றவையும் அவை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள், முடிவுகள் என்பனவையும்.

(ஆ) சூழல் தொடர்பான பிரசுரங்கள், வெளியீடுகள் கொண்ட தகவல் மையமும்.

(இ) தரவுகளை சேமித்து வைக்கக் கூடிய தேவையான CDSISIS இலகு கணனி வகைகளும்.

(ஈ) இவற்றை கையாளக் கூடிய ஓர் சூழல் தரவு நிபுணர் ஒருவரையும், நூலகர் ஒருவரையும் கொண்டதான இத்தரவு வங்கியு தகவல் நிலையமும் 1993-ம் ஆண்டு இறுதியிலிருந்து செயற்பட ஆரம்பித்துள்ளது,

Unisist News Letter No - I

இந்த வாசகத்துக்கும் அவரது செயற்பாட்டுக்கும் ஒரு நெருக்க உறவு இருப்பதை உணர முடிகிறது. இதனால் அவர் பெரும வேளைகளில் பெரும் சோதனைகளுக்கும் ஆளாக்கப் பட்டுள்ளார்.

பிறரது காரியங்களில் ஈடுபடும்போது அனுகூலமாக இருந்தது அவரது நெறிவாழ்க்கை. ஆனால் அவரது குடும்பச் சிறப்புக்கு அனுகூலமாக அது அமையவில்லை. மாஸ்ரர் எப்பிடியாவது நாங்கள் கேட்ட தொகையைத் தருவார். திருப்பி ஏதும் கதைக்க மாட்டார் என்ற தோரணையில்தான் மாப்பிள்ளை வீட்டார் அவ்வளவு பெரிய தொகையைக் கேட்டிருந்தனர். மாஸ்ரரும் ஒப்புக் கொண்டார். ஆனால் இன்று வந்த கடிதம் மாஸ்ரரின் மனதைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

''தவறான வழிகளில் ஈடுபட்டே மற்றவர்கள் பணம் சம்பாதிக்கிறார்கள்''

மீட்டு அந்த வரிகளைப் படிக்கிறார்

உடனே பதில் எழுதவேண்டும். தனது காகிதத் தலைப்பையும் பேனாவையும் எடுத்துத் தயாராகின்றார். கடிதத் தலைப்பில் அவரது பெயர், முகவரி கூடவே சுவரில் தொங்கும் வாசகமும் அச்சிடப்பட்டுள்ளது. அந்த வாசகம் அவரது பிள்ளைகட்கு எப்போதும் தகப்பனாரின் கொள்கையைக் கண்டிப்போடு கூறிக் கொண்டேயிருக்கும்.

''என்னங்க, மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஆக்கள் வந்திருக்கினம்'' மனைவியின் குரல் கேட்டு விறாந்தைக்கு வந்தவர் மாப்பிள்ளை வீட்டாரைக் கண்டு தன் சங்கடத்தை எல்லாம் மனதுள் புதைத்துவிட்டு, அவர்களை மகிழ்வோடு முகம் மலர வரவேற்கிறார். திருமணப் பேச்சுக்கு முன்நின்ற ஒருவரும், மாப்பிள்ளையின் மைத்துனர் முறையான ஒருவரும் வந்திருந்தனர். வழமைபோல் குசலம் விசாரித்தப் பின் விடயத்துக்கு வருகின்றனர்.

தேநீரை வழங்கிவிட்டு கணவருக்குப் பக்கத்தில் நிற்கிறார் மாஸ்ரரின் மனைவி.

''நீங்கள் பிறகு ஒரு முடிவும் சொல்லேல்ல. எங்களுக்கு வேறுபக்கத்தாலயும் ஆக்கள் நெருக்கினம் அதுதான்...''

மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்தவர் பேசக் கொடுக்கிறார். சும்மா இப்பிடித்தான் சொல்லுவினம் என்று தெரிந்தாலும், உள்ளூர ஒரு பயமும் மாஸ்ரருக்கு இருக்கவே செய்தது. சிலவேளை உண்மையாய் இருக்குமோ... இந்தச் சம்பந்தம் குழம்பிப்போனால் ஊரில பலமாதிரிக் கதையள் வரும். பிறகு ஒரு சம்பந்தம் சரிப்படுத்துகிறதென்றால் மிகவும் கஸ்ரம்.

என்றெல்லாம் யோசித்தும் எதையும் வெளிக்காட்டாதவராய் ''நாங்கள் வாறதுக்குத்தான் இருந்த நாங்கள்... மகன்ர கடிதத்தை எதிர்பார்த்து இருந்ததால சுணங்கிப்போச்சு. எதுக்கும் நாங்கள் வாறகிழமை வந்து சொல்றம்... சொல்றதென்ன ஒரு நாளை வைப்பம்.'' மாஸ்ரரின் பேச்சு மாப்பிள்ளை வீட்டாருக்குத் திருப்தியைக் கொடுத்தது. மாஸ்ரர் எப்பிடியாவது சொன்னபடி நடப்பார் என்பது மாப்பிள்ளை வீட்டாருக்குப் புரிந்து விட்டது ஆனால் மாஸ்ரருக்கோ இதை எப்படி நிறைவேற்றுவது என்ற ஏக்கமே நெஞ்சில் நிலைத்தது. மகனின் கடிதம் மாஸ்ரரைப் பல வழிகளிலும் சிந்திக்க வைத்தது.

''அப்ப நாங்கள் வாறம்'' வந்தவர்கள் புறப்பட்டு விட்டார்கள். மாஸ்ரருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. திடீரென யாரிடம் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை கேட்பது. அப்படித்தான் யாரும் தந்தாலும் அதை எப்படித் திருப்பிக் கொடுப்பது. கடன்பட்டு அவர் இதுவரை அனுபவம் இல்லாதவர். தனது மாஸ்ரர் சம்பளத்தை மனைவி கையில் கொடுத்துவிட்டு ''சிவனே'' கடவுளே என்று இருந்தவருக்கு இப்போ மகளின் திருமணம் ஒரு சுமையாகவும், மகனின் கடிதம் மிகப் பயமாகவும் இருந்தது.

தனது அறைக்கு வந்தவர் கடிதம் எழுதத் தயாராகின்றார்.

எப்படி எழுதுவது...

மகளின் திருமணம் - சீதனம்...

மகனின் கடிதம். ''தவறான வழிகளிலேயே பணம் சம்பாதிக்கலாம்.

சுவரில் தொங்கும் அந்த வாசகம் கடிதத் தலைப்பிலும்...

மகளின் திருமணம்...

மீண்டும் மீண்டும் அவர் குழப்பமடைகின்றார்.

அவருக்குப் பலத்த சோதனை ஏற்பட்டு விட்டது.

சத்திய சோதனைக்கு அவர் இப்போது தள்ளப்பட்டு விட்டார்.

கடிதம் எழுதும் வேலையைச் சற்றுநேரம் ஒதுக்கிவிட்டு ஓய்வு எடுக்கிறார்.

''என்னப்பா யோசிக்கிறியள்...''

...... ...... ...... ...... ......

''உப்பிடித்தான் முந்தி சுப்பிரமணியத்தின்ர மோள் ராசமலருக்கு ஒரு சம்பந்தம் பேசி இந்தா அந்தா எண்டிட்டு குழம்பிப் பிறகு எத்தின வரியத்தால இரண்டாந்தா மாப் பிள்ளைக்குக் கட்டி வச்சது தெரியாதா... அவையளுக் கென்ன உங்கட முகத்துக்காகக் கேப்பினம். பிறகு வேற எங்கயண்டாலும் சரிவந்தால் செய்வினம். நாங்களெல்லோ அக்கறையா இருக்க வேணும். சாத்திரியாரும் பிள்ளையின்ர குறிப்புப் பாக்கேக்க சொன்ன வர் எங்கேனும் வசதி வந்தால் இப்ப செய் யுங்கோ, இல்லாட்டா ஐந்து வருடத்துக்குப் பிறகுதான் கலியாணம் நடக்குமெண்டு. இப்பவே பிள்ளைக்கு முப்பது வயதாப் போச்சு'' மாஸ்ரரின் மனைவி தன் மனக் கிலேசங்களை வெளிப்படுத்தினார். மாஸ்ர ருக்குத் தலையைச் சுற்றியது. அப்படியே சாய்மனைக் கட்டிலில் படுத்துவிட்டார்.

அப்போதுதான் வெய்யிலுக் குள்ளால வந் தவர் குடையைத் தன் அறை மூலையில் சாத்திவிட்டு, தனக்கு வந்த கடிதத்தை அவசரமாகப் படிக்கிறார்...

அன்புள்ள அப்பா, அம்மா, அக்கா, தங்கை யாபேர்க்கும் யான் இவ்விடம் நல்ல சுகமே இருக்கிறேன். அதுபோல் நீங்களும் இருக்க வேண்டுகிறேன். அக்காவின் திருமணத்துக்குத் தேவையான பணத்தை அனுப்புகிறேன். திருமணத்தைச் செய்யவும். அவர்கள் கேட்ட சீதனப் பணத்தைக் கொடுக்கவும். திருமண நிகழ்ச்சிகளை வீடியோ எடுத்து அனுப்பவும். தம்பியையும் தங்கையையும் கவனமாகப் படிக்கும்படி கூறவும்.

இப்படிக்கு
அன்புமகன்
செந்தூரன்.

மாஸ்ரரின் கைகள் படபடக்கின்றன. கண் கள் பனிக்கின்றன. கடிதத்தை மேசையில் வைத்துவிட்டு விறாந்தைக்கு வருகிறார். சுவ ரில் தொங்கும் ''அந்த'' வாசகத்தைப் படித்துவிட்டு, அந்தப் பலகையைக் கழற்றி விட்டுத் துடைக்கின்றார்.

''எனக்கு எப்படியாவது பணம் வேண்டும்'' என்று சென்ற கடிதத்தில் தன் மகனுக்கு எழுதிய வாசகம் அவர் மனத்தைப் புற்று நோய்போல் அரித்துக் கொண்டேயிருந்தது.

● □ ●

## சூரிய சக்தி

அவுஸ்திரேலிய பாடசாலை மாணவர் குழு ஒன்று சூரிய சக்தி மூலம் இயங்கக் கூடிய கட்டுமரம் ஒன்றை கட்டியுள்ளனர். இக் கட்டுமரம் இவ்வகையை ஒத்த படகுகளை விட 5சத வீதம் திறமையாக செயற்படக் கூடியது. சூரிய சக்தியால் இயங்கக் கூடிய கட்டுமரம் புதிய அமைப்பில் Divingcell வினால் அதாவது பாரமற்ற கடினமான பொருளால் ஆக்கப்பட்டுள்ளது இதற்கென சிறப்பாக அமைக்கப்பட்ட எலெக்ரோனிக் கறுப்புப் பெட்டிகள் சக்தி வெளிப் பாட்டை அதிகரிப்பதோடு, கட்டுமரத்தின் மின் இயந்திரத்தின் திறமை செயற்பாட்டையும் அதிகரிக்கின்றது.

— Down to Earth
June 1993

# ஆண்களின் பார்வையில் பெண்கள்...

★ சக்திவேல்

இயற்கையின் படைப்பிலே மானுடத்தின் தனித்துவத்தை இதிகாசங்களும் இலக்கியங்களும் போற்றி நிற்கின்றன. மனிதன் ஒரு சிறப்பு விலங்கு என சமூகம் விஞ்ஞானம் கூறி நிற்கிறது. இத்தன்மைக்கும் காரணம் அவனால் சிந்திக்கவும் மற்றவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளவும் மதிக்கவும் அவனுக்கிருக்கும் பகுத்தறிவுத்திறன்தான். இருந்தாலும்கூட சமூக நடைமுறைகளில் ஆண், பெண் என்ற இருபாலரிடையேயும் ஒரு இடைவெளி இருந்து வருவதை மறுப்பதற்கில்லை. இந்த இடைவெளி ஒரு ஒடுக்குமுறைக்கான தன்மையாகி விட்டதென பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தப் பின்னணியில் ஆண்களின் பார்வை பெண்கள் மீது எவ்விதம் ஊடுருவி நிற்கிறது என்பதை அறிந்து கொள்ளும் நோக்கோடு என்னிடம் பழகிய சிலரிடம் கதைகொடுத்தேன்.

ஒரு சமூக சேவையாளர் கூறிக்கொண்டார் "உண்மையில் எமது பண்டைய வாழ்வியல் அடிப்படையில் ஏற்பட்ட பண்பாட்டு கலாச்சாரப் பின்னணிகள் பெண்கள் மீதான ஒருவித ஒடுக்குமுறைக்கு காரணமாகியுள்ளன. இதிகாசங்களும் இலக்கியங்களும் மகளிருக்கான கடமைகளை குடும்பம் என்ற நிறுவனத்துக்குள்ளேயே சிறப்பித்து நின்றன. கணவனை இழக்கையில் உடன் கட்டை ஏறுதல், அல்லது சமூகத்தில் இருந்து நற்காரியங்களுக்கு விலக்கி வைத்தல், பாரிய விவாக முறைகள், அவர்கள் மீதான காம இச்சைகளைத் தூண்டக் கூடிய வர்ணனைகள், இலக்கியப் படைப்புக்கள் இவை எல்லாம் பெண்கள் மீது ஆண்களை ஒரு விதமான நோக்குக்கு இட்டு சென்றுள்ளன. ஆண்கள் பெண்களை சமூகத்தில் ஒரு இளைத்த பாலினர் (Weakcr Sex) என்றுதான் நோக்குகிறார்கள். இது அவர்கள் மீதான ஒரு புறக்கணிப்பு அல்லது பரிதாப உணர்வே"

திருவள்ளுவர்கூட "தற்காத்து தற்கொண்டாற் பேணி நகை சான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்" என்று ஈரடிகளில் இல்லாளை அமைதிப்படுத்தி விட்டதை நகைச்சுவையாக எடுத்துக் கூறினார். "ஒரு பெண் தன்னை கற்பு நெறியில் பாதுகாக்க வேண்டும். தன்னை மனைவியாக ஏற்றுக் கொண்டு பணிவிடைகள் செய்து பேண வேண்டும், தங்கள் குடும்பத்துக்கு இழுக்கு வராத வகையில் நற்பெயரை பேண வேண்டும் இத்தனைக்கும் மேலாக சோர்வில்லாது உழைப்பவராக இருக்க வேண்டும் இதை இன்றைய ஆண்களும் எதிர்பார்க்கிறார்கள்"

"முக்கியமாக ஒரு ஆண் குடும்ப, சமய நிறுவனங்கள், பாடசாலைகள், கழக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் அரசியற்கட்சி அமைப்புக்கள் என்பவற்றில் தன்னை தொடர்புபடுத்தி சமுகமயப்பட்டளவுக்கு பெண்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை பெண்களின் பங்கு குடும்பத்துடன் மட்டும் நின்று விட்டாது அதற்கு அப்பால் அவர்களின் தொடர்பு ஆண்களைவிடக்குறைவானதாகவோ அன்றி ஆண்களுக்கு பிற்பட்ட ஒன்றாகவோதான் ஏற்பட்டுள்ளது" இதுதான் இந்த இடைவெளிக்கான காரணம் எனக்குறிப்பிட்டார்.

குடும்பவாழ்க்கையில் அனுபவம் பெற்ற ஒரு ஆசிரியர் கூறிக்கொண்டார் "ஆண், பெண் இருபாலாரையும் தொடர்புபடுத்தும் அடிப்படை சமூக நிறுவன அமைப்பு குடும்பம் தான் இது மற்ற சமூக நிறுவனங்களையும் விட மிகவும் அன்னியோன்னியமான நெருங்கிய, மன எழுச்சி மிக்க உறவினைப் பேணும் இடமாக அமைகிறது. ஆனால் ஆண்களாகிய நாம் இந்த உறவுகளை இறுக்கமாக பேணிக்கொள்கிறோமா என்பதே இன்றுள்ள பிரச்சினையாக உள்ளது"

''திருமணப் பேச்சின் போது மனைவி படித்தவளாக இருக்க வேண்டும், பண்புள்ள வளாக இருக்க வேண்டும், அழகானவளாக இருக்கவேண்டும், சீதனத்துடன் அமைந்த வளாக இருக்கவேண்டும், தனது தகுதி (கல்வி) க்கு மிஞ்சியவளாக இருக்கக் கூடாது. என்று தம் எதிர்பார்புகளை நிபந்தனை களாக்கும் ஆண்கள் குடும்பவாழ்க்கையின் போது கைப்பிடித்தவளை திருப்திப் படுத்து கிறார்களா சமூக நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வாய்ப்பளிக்கிறார்களா என்பது முக்கியமான விடயம்''.

இதில் பெரும்பாலானவை போலித் தன்மை வாய்ந்தவைதான். வீட்டில் பிரச் சனைகள் இருந்தாலும் கொண்டாட்டங் களின் போது குடும்ப உறவையும், அந்தஸ் தையும் மனைவி மூலம் வெளிப்படுத்த முனையும் போக்கு, சமையலறையில் இல் லாளுடன் இணைந்து வீட்டுப்பணிகளையும் செய்து திருப்திபடுவதில் கௌரவத்தின் தாக்கத்தினால் பின்னடிப்பு, தொழில் புரியும் பெண்கள் மீது வீணான சந்தேகங் களை வளர்த்துக் கொள்ளல், வீட்டில் தனது தாய் தந்தையர்களுக்கு கட்டுப்பட்ட வளாக இருக்கவேண்டும் என்று மறைமுக மான ஒரு அழுத்தம் கொடுத்தல். குடும்பத் தில் உள்ள பெண் பிள்ளைகளை படிக்க வைப்பதில் அக்கறை காட்டாமை, (இதற்கு காரணம் ஆண் பிள்ளைகள் தான் தமது வாரிசுகள், அவர்கள் தான் தமக்கு உழைத்து தருபவர்கள் என்ற எண்ணமே) பெண்குழந்தைகளை அடுத்தடுத்து பிர சவிக்கும் போது மனமோணுதல் பிறக்கப் போவது பெண்குழந்தை என்றால் கருவி லேயே அழித்து விடுவதற்கான கொடூரமான சிந்தனைகள், திருமண வயதில் உள்ள பிள்ளைகளையோ, சகோதரிகளையோ வாழ்க்கைப்படுத்த முடியாத நிலையில் எழும் மனப்புகைச்சல்களை அப்பிரச்சினை பிள்ளைகள் மீது கர்ம மாத்திரைக்கல்களை உண்டு பண் ணும் போக்குகள் திருமணப் பேச்சின்போது பெண்களின் விருப்பத்தினை கலந்தா லோசிக்காத போக்குகள் (இதற்கு காரணம் பெண்ணை வாழ்க்கைபடுத்துவதற்கான சீத னத்தை தந்தையோ, சகோதரரோ தேடிக் கொடுக்கின்ற நிலைமையும், பெண்ணை ஒரு ஆணுக்கு வாழ்க்கைப்படுத்தி கைப்பிடித்த வனையே அவளின் கண் அவன் ஆக (கண வனாக) செய்து பெண்ணை உலகம் புரியாத வளாக ஆக்கிக் கொள்வது) இவ்வாறான உடுப்புக்கள் தான் அணிய வேண்டும் இவ் வாறு தான், நடந்து கொள்ளவேண்டும் என நிர்ப்பந்தித்தல், காதல் திருமணங்களில் எழும்பிரச்சனைகளின் போது பெண்கள் பக்கம் குற்றம் சுமத்துதலில் ஆர்வம் காட்டல், திரு மண பேச்சுக்களில் நோய், பரம்பரை வியாதி கள் தொடர்பான ஆராய்வினை பெண்கள் பக்கம் கூடுதலாக நோக்குதல் இவற்றைவிட அண்மைக்காலங்களில் பெண்களின் கலவிகள் கனை வெளிநாட்டு பயணங்களின் போதும், வெளிநாட்டு திருமண நிச்சயங்கள், நடை முறைகளின் போதும் பயன்படுத்தி கொள் ளுதல் என்பன இன்றைய குடும்பங்களில் அலைமோதிக் கொண்டிருக்கும் பாரிய பிரச்சனைகள்.'' என்று ஒரு பிரசங்கமே செய்து முடித்தார்.

பஸ் பிரயாணங்களின் போது இடம்பெறும் வெறுக்கத்தக்க நிகழ்வுகளை பஸ்நடாத் துனர் ஒருவர் நகைச்சுவையாக ஆனால் மனக்கொதிப்புடன் சொல்லிக்கொண்டார். பஸ்ஸில் இளசுகள் விடும் சேட்டைகள் பெரிசில்லை. ஆனால் பெரியவர்களின் சின்னத்தனமான போக்குகள்தான் பிடிக் காத விசயங்கள். சில ஆண்கள் இரண்டு பேருக்கு மேல் இன்னொருவரை சீற் றில் இருக்க இடம் விடமாட்டார்கள். ஆனால் நிறைய பெண்ணாக இருந்தால் அசடு வழிய அழைத்து அருகில் இருத்திக் கொள்வார்கள். அதில் அவர்களுக்கு ஒரு சுகம் இன்னும் சிலர் தமது அருகில் காலியாக உள்ள இருக்கையில் பொதிகளை வைத்து இருக்கைகளை புக் பண்ணிவிடுவார்கள், எந்த ஒரு ஆணாவது வந்தாலும் ''ஆள் இருக்கு'' என்று எரிந்து விழுந்து சொல்லிக்கொள் வார்கள். இளம் பெண்கள் வரும் போது மட்டும் பொதிகளை மெதுவாக நகர்த்தி சீட் காலியாக இருப்பதை உணர்த்தி நிற்பார் கள் இதில் அவர்களுக்கு ஒரு சுகம்'',

# எழுந்திடுவோம்



★ மீசாலையூர் கமலா

இந்த மண்ணே தலை தாழ்த்தி,
எமது மங்கையரைக் கௌரவித்து நிற்கிறது
களமாடும் மங்கையரைக் கௌரவித்து
நிற்கிறது

ஆனால்...... மண்ணில் வாழ்வதற்கோ
மங்கை...... தலை குனிந்து நிற்கிறாள்.

வேகம் விரைவு, எதிலும் விரைந்து
சாதனை மலைகளைக் குவித்து நிற்பவள்,
சமுதாயத்தின் முன்னே குனிந்து நிற்கிறாள்,
வீதிகளில் துரத்துதல், விலை பேசுதலோடு,
அடிமைத் தனங்களெல்லாம் அகன்றிட
வேண்டும்.

அடக்கம்! அதுதான் அணங்கிற்கு அழகாம்.
பாரதி பகர்ந்தான்! நிமிர்ந்த நடை,
நேர் கொண்ட பார்வை யென்றான்.
அடக்கத்தோடுதான் புதுமைப் பெண்ணாய்ப்
புரட்சி செய்தோம்! ஆனாலோ......
எமது சமுதாயத்தின் மனங்களிலோ......,
இருள் நீங்கவில்லை.
எமக்கு ஏமாற்றம் அதிகமாகத்தானுள்ளது
இருபதாம் நூற்றாண்டோ கிட்ட வருகிறது.
சமராடும் மண்ணோ சுதந்திரத்தைப் பெறப்
போகிறது.

நாமும் நிலத்தில் நிமிர்ந்திட வேண்டும்.
சுதந்திர மண்ணில் நிமிர்ந்திட வேண்டும்,
மார்ச் எட்டு! மகளிர் தினம்
மனித உள்ளங்களே உயர்ந்திடுவீர்
சீர்கேடுகளைக் களைய உதவிடுவீர்.
சகோதரிகளே! நாம் எழுந்திடுவோம்.

கொண்டக்டர் வாய் விட்டுச்சிரித்துக் கொண்டார் ''இது பஸ்ஸில் மட்டுமில்லை. புகையிரதத்திலும் தான்'' மெதுவாகக் கூறிக்கொண்டார்.

தொழிற்சாலைகளிலும், அரச அலுவலகங்களிலும் தொழில் பார்க்கும் பெண்களைப் பொறுத்த வரையில் ஆண்களின் மனப்போக்குகள் எவ்வாறு இருக்கின்றதென பதை ஒரு தொழில் அதிபரிடம் கேட்ட பொழுது ''பொதுவாக பெண்கள் ஏதாவது தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது வரவேற்கத்தக்க முன்னேற்றகரமான விடயம் என்றாலும் சில ஆண்கள் தொழில் பார்க்கும் பெண்களை மணம் முடித்தபின் தொழில்பார்பதில் இருந்து தடுத்து நிறுத்தி விடுகிறார்கள். தொழிற்சாலைகளில் இரவு நேரக்கடமைகளில் ஈடுபடுத்தப்படும் பெண்களை ஆண்கள் வித்தியாசமான போக்கில் அணுக முற்படுகிறார்கள் குறிப்பா பெண்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் போதிய சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவதில்லை. வேலைத்தளங்களில் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்கும் பெண்கள் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இவற்றைவிட பெண்களுக்கு கொடுக்கப்படும் வேதனங்கள், அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் வேலை வாங்கல்கள், வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் பெண்கள் தொழிலை பெற்றுக் கொடுக்கும் கொம்பனிகளாலும், தொழில் வழங்குவோராலும், கணவன்மாராலும் அவர்களது ஊதியங்கள் உறிஞ்சப் படுகின்ற தன்மைகள் வேலைதேடி வெளிநாடு செல்லும் பெண்களை

## "பெண்களும் தலைமையும்"

அனைத்துலக மகளிர் தினத்தின் முக்கிய அம்சமாக "உலகின் தலைமைத்துவத்தில் பெண்களின் சமத்துவமும் அதிகாரமும்" என்ற மையக் கருவைத் தலைப்பாகக் கொண்டு இம்முறை நியூயோக்கிலுள்ள ஐ. நா. தலைமைச் செயலகத்தில் மார்ச் 8-ம் திகதி 1—3 மணிவரை மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் உயர் அரச அதிகாகள், ஐ. நாடுகளின் உயர் பதவிகளில் உள்ளோர் பங்குபற்றவுள்ளனர். ஐ. நா வின் நான்காவது மகளிர் மாநாட்டின் செயலாளர் நாயகமாக கடமையாற்றும் கேற்றுட் மொன்கெலாவும் பங்குபற்றவுள்ளார்.

---

கீழ்தரமாக எண்ணுகின்ற நிலைமைகள், பெண்களை உல்லாச பயணத்துறைகளில் ஈடுபடுத்துதல், ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் தொழில் செய்வதற்கு பெண்களை ஊக்கப்படுத்துகின்ற நிலைமைகள், பொருட்களை விற்பனை செய்வதற்கான விளம்பரங்களில் பெண்களின் கவர்ச்சிக்கு இடங் கொடுத்தல், ஆகிய மனப்போக்குகள் ஆண்களிடம் ஏற்படுகின்றன என சுட்டிக் காட்டினார்.

அரசியல் துறைவிமர்சகர் ஒருவர் "பெண்களின் அரசியல் ஈடுபாடு மிகவும் தாமதமான வளர்ச்சியைக் கொண்டுள்ளது. வீட்டிலேயே பெண்களுடைய கருத்துக்களுக்கும் தீர்மானங்களுக்கும் ஆண்கள் முக்கியத்துவம் கொடுக்காததும், அவர்களை பொறுப்பற்றவர்களாகவும் பார்க்கும் தன்மை இருக்கும் போது நாட்டுப் பணியில் அவர்களை எந்தளவுக்கு இணைத்துக் கொள்ளக் கூடியதாக எதிர் பார்க்கலாம் என கேள்வி எழுப்பிக் கொண்டார்.

இதற்கெல்லாம் பெண்கள் உலக அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும் இயன்றளவுக்கு கல்வி அறிவை பெறவேண்டும் சமூக சேவைகளிலும் சமூக நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும் இதற்கான விட்டுக் கொடுப்பினை ஆண்வழி சமுதாயம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக ஒரு தந்தை தன் பெண் பிள்ளைகளின் கல்வியூட்டலுக்கு உளப்பூர்வமாக அக்கறை காட்டாத நிலை பின்தங்கிய கிராமப் புறங்களில் அதிகம் காணப்படுகிறது பெண்பிள்ளைக்கு கல்வி கற்க செலவிடுவதனால் எந்தவித பிரதிபலனும் (அவனின் உழைப்பின் பலன்) இல்லை என்ற நிலையும் பெண் பிள்ளைகளுக்கு உயர்கல்விகளை ஊட்டுவது அவர்களின் தரத்துக்கேற்ற கணவனை தேடி திருமணம் செய்வதில் பிரச்சனைகளை கொடுக்கும் என்ற நிலையும் பெண்களுக்கு கல்விக்காக செலவழித்தாலும் கூட திருமணத்தின் போது கொடுக்க வேண்டிய சீதனத்தொகை கொடுத்தே ஆக வேண்டும் என்ற நிலையும் பெண்களின் கல்விக்கு தடைகளாக நிற்கின்றன" எனக்குறிப்பிட்டார்.

உண்மையில் ஆண்களின் பார்வை ஒரு ஆதிக்க நிலையில் பெண்களை ஊடுருவி நின்றாலும் கூட இவற்றுக்கு அடிப்படைக் காரணம் எமது சமூக, கலாச்சார பின்னணிகள் தான் இந்த பின்னணியின் தாக்கங்கள்தான் ஆண்களை அவ்வாறு பார்க்கவைக்கிறது. பெண்களை சமூகத்தில் இவ்வாறு வளர வேண்டும் என போதித்து நிற்கிறது பெற்றோர் தம் ஆண் பிள்ளைகள் எவ்வாறு வளர வேண்டும், தம் பெண்பிள்ளைகள் எவ்வாறு வளரவேண்டும் என்று தீர்மானிக்கும் தன்மையில்தான் இந்த இடைவெளிகள் குறைக்கப்பட முடியும் இந்த வகையில்தான் பெற்றோரின் முற்போக்கான எண்ணங்களும் வளரும் பிள்ளைகளின் வளர்ப்பு முறை மாற்றங்களும் ஆண் பெண் சமத்துவத்துக்கு வழிசமைத்து நிற்கும் "தற்போது பெண்ணினத்திற்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் அல்ல புராதன வழக்கங்களுக்கும் விடுதலை உணர்வுகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலாகும்" ஒரு பெண் எழுத்தாளரின் இந்தக் கருத்துக்கள் ஆண்களை சிந்திக்கவும், பெண்களை செயற்படவும் வைக்க முனையும் ஒரு தத்துவமாக அமையட்டும். □

சிறு கதை

# கல்லறை

★''பிரக்ஞா''★

''சிந்தித்தால் சிரிப்பு வரும் மனம் நொந்தால் அழுகை வரும்' எங்கிருந்தோ வானொலியில் சன்னமாக கேட்டுக் கொண்டிருக்கும் பாடல் இறுகிப் போன என் இதயத்தை இதமாக வருடிக் கொடுக்கிறது. வெறுப்பா வைராக்கியமா என்று இனம் புரியாத வகையில் அர்த்தமற்ற சிரிப்பொன்று என்னிதழ்களில் துளிர் விடுகிறது. இன்னும் எத்தனை அவமானம் என்னைக் காத்திருக்கிறதோ! உச்சந்தலை வெடித்துப் பூமி பிளந்து கீழே கீழே ஆதாள பாதாளத்திற் செல்வது போன்ற ஒரு உணர்வு.

''மங்களா யார்? அடுத்த விசாரணைக்கு ரெடியாய் இரு'' பெண் குரல் கேட்டு மலைத்து விழித்து நிமிர்கிறேன்.

நீ?... நீயா? என் தோள்களைத் தொட்டுலுப்பிய காவற்துறைப் பெண்ணை உற்று நோக்குகிறேன்... ஓ! அவள் என் உயிர்த்தோழி சுகந்தா.

''மங்களா நீ... நீயா இந்தத் தவற்றைச் செய்தாய். என்னால் நம்பவே முடியவில்லை. எங்கோ பிழை நடந்து இருக்கிறது. உண்மையைச் சொல்.''

வாய் பேச முடியாத நான் எதுவுமே என் தவறல்ல என்று சைகளால் சைகை செய்கிறேன் என்ன புரிந்ததோ உன்னால் இப்போ பேச முடியாதில்லையா? ''இரு வருகிறேன்'' என்று உள்ளே செல்கிறாள்.

அவளுடன் கொன்வென்றில் படித்த இனிய நாட்கள், கல கலவெனச் சிரித்தபடி கைகோத்தும் பாடித்திரிந்த நாட்கள், பேச்சில், பாட்டில், எழுத்தில், ஒழுக்கத்தில் பாடசாலையில் முதன்மை மாணவியாக நான் பரிசெடுத்த நாட்கள் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்த் தெரிகிறது. ஓ. எல் முதல் தரத்தில் சித்தியடைந்து ஏ. எல் படிக்கும்போது காரைநகரிலுள்ள என் வீட்டிற்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொழுது விமானத்திலிருந்து கலிபர் தாக்குதலால் ஏற்பட்ட காயம் ஒரு கிழமை கழித்து யாழ் போதனா வைத்திய சாலையில் கண் விழித்தபோது என் அக்காவும், அத்தானும் மட்டும் நின்ற காட்சி, அம்மா அப்பாவைக் கண்களாற் தேடிய பொழுது அவர்களும் மற்றச் சகோதரர்களும் உயிருடன் எரிக்கப்பட்டதாக அறிந்த செய்தி, மீண்டும் ஒரு கிழமை மீளா மயக்கத்திலிருந்த பரிதாப நிலை எல்லாமே நினைவில் பிலிம் றோலாகச் சுழல்கின்றன. அடுத்து நடந்தவையும் நினைவுக்கு வருகின்றன. இழப்பிலும் ஒரு பிடிப்பு, அக்காவும் கணவரும் நான் அனாதையில்லை எனத் தந்த தென்பு. எனினும் குரல்வளையில் ஏற்பட்ட காயத்தால் என்குரல் போய்விட்டதே என்ற

தவிப்பு, எனக்கு ஏற்பட்டது. ஊமைக் காயம் மட்டுமல்ல, காயம் என்னையே ஊமையாக்கி விட்ட கொடுமை ஆதங்கம், அதனால் நினைவிழந்து, மனமழிந்து, பேசும் வளமழிந்து நான்பட்ட துன்பம் வீடற்ற எமக்கு அகதி முகாமுக்கருகில் மானிப்பாயில் சிறு ஓலைக் குடிசை கட்டித்தந்தார்கள். வாய் பேசமுடியாத நான் பகலில் குடிலை விட்டு வெளிப்படுவதே இல்லை.

ஒரு நாள் இருள் புலருமுன் வழக்கம் போல் அருகிலுள்ள வீட்டில் குளித்து விட்டுத் திரும்புகையில் ஒரு முரட்டுக்கரம் என் வாயைப் பொத்த இன்னொரு கரம் என்னைத் தரையில் விழுத்தியது. வாயினால் கத்திக் குரல் எழுப்ப முடியாத நிலையும் ஏற்கனவே பலவீனப்பட்டிருந்த உடலும் அயோக்கியன் ஒருவனின் அநியாயத்திற்கு அடிமையாயின அந்நிலையிலும் போராடிய என் கைகளில் அவன் தலைமயிரும் பற்களுக்கிடையில் சதைத்துண்டமும் எஞ்சியும் கண்ட பயன்...! அந்த அசம்பாவிதம் எஞ்சியிருந்த என் வாழ்வின் நிம்மதியையும் குலைத்தது. மயக்கம் தெளிந்து குடிசைக்குத் திரும்பிக் கண்ணீர் வற்றுமட்டும் அழுதேன். காரணம் புரியாமல் அக்கா விழித்தாள் என்னை வற்புறுத்தினாள் அழுவதைத் தவிர எப்படி அந்த அநியாயத்தை அவளிடம் சொல்வேன் யார் எவன் என்று எனக்கே தெரியாதபோது எப்படி அவளிடம் சொல்லமுடியும். சொன்னாற்றான் நம்புவாளா? என்துயர் என்னுடன் போகட்டும் என்று மனம் வெந்து வெந்து நாட்கணக்காய் அழுதேன். அழுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

விதி என்னைவிடவில்லை சிறிது சிறிதாக என் வயிறும் பருத்தது, அதன் பின் தான் அக்காவிற்கு என்மேல் சந்தேகம் ஏற்பட்டது "யாரடி சொல்" என்றாள். எனக்குத் தெரியாது என்று கையை விரித்து நடந்ததைச் சைகையால் உணர்த்தினேன். அக்கா நம்பவில்லை அத்தானும் நம்பவில்லை தொடர்ந்து. நச்சரிப்பு,

"இதென்ன அவமானம் இதனை அழித்து விடுவோம் பார்" அக்கா பேச்சை நான் மறுக்கிறேன்.

"இருக்க இடமில்லை உண்ண உணவில்லை இது ஒரு கூத்தா. இந்த அவமானத்தை நீ வளர்த்தால் நானும் அத்தானும் தூக்கில் தொங்க வேண்டியது தான்" வசவுமேல் வசவு அக்கா பொழிகிறாள்.

பல நாள் அழுது நான் இந்தப் பிள்ளையைப் பெற்றெடுப்பது என்ற முடிவிற்கு வந்துவிட்ட பின் என் முடிவை மாற்ற முடியுமா? எனக்கு இனி நான் ஒரு நிரந்தர ஊமையே எனக்கு வாழ்வளிக்க இனி எவருமே துணியமாட்டார்கள். எனவே, எந்த வன்செயல் மூலமோ, பலாத்கார மூலமோ நான் விரும்பாமலே இறைவன் எனக்களித்த குழந்தையை, என் உதிரத்தில் மலரப் போகும் மலரை நான் பெற்று வளர்த்தால் அந்தக் குழந்தை என் எதிர்காலத்தை மலர வைக்காதா என்ற நப்பாசை.

காரை நகரில் சகல வசதியும் கொண்ட எங்கள் வீட்டில் இருந்தவேளை பார்த்த தொலைக்காட்சி நாடகம் ஒன்று நினைவிற்கு வந்தது. அதிலேயும் என்னைப்போல ஒரு ஊமைப்பெண் காமுகன் ஒருவனால் சூறையாடப்படுகின்றாள் அவளுக்கும் அவளைக் கெடுத்தவனைத் தெரியாது தற்கொலை செய்யச் சென்றவளை ஒருவன் காப்பாற்றுகிறான். குழந்தையைப் பெற்று வளர்க்கிறாள். அப்போது ஒரு இனிய அர்த்தமுள்ள பாடலை வீணையை மீட்டியபடியே பாடுகிறாள்.

"இந்த வீணைக்குத் தெரியாது இதைச் செய்தவர் யார் என்று. இந்தப் பிள்ளைக்குத் தெரியாது இதன் தந்தையை யாரென்று" அப்பொழுது வீடியோவில் அதைப் பார்த்து மெய்யுருகிய எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? இறைவா இதுவா உன் சோதனை.

எப்படியும் குழந்தையைப் பெற்று வளர்ப்பதென்று முடிவு செய்தேன். ஆனால் நடந்தது... உயிரைப் பிழிந்தெடுப்பது போன்ற இடுப்பு வலி வந்ததும் நான் நிலத்தில் சாய்ந்து துடித்துத் துவண்டு மயங்கியது

## மரணகீதம்

★ தி, செல்வமனோகரி

மனிதம்
மரணித்துப் போனதால்
முதுமை (முதுர்ச்சி)
என்மீது திணிக்கப்பட்டது
நானறியாமலே
எப்பொழுதும்
பிறருடனான என் உடனிருப்புகள்
அநாவசியமானதால்
இன்னும் ஏதோவோர்
அழைப்புக்காய் மட்டும்
என்
இனியவளே!
நாளை
அது என்
மரணநாளாய்க் கூட இருக்கலாம்
அதற்கு முன்
உன்னிடம் ஒரு வார்த்தை
மரணத்தின் பின்னாவது
எனது ஆத்மா காயமுறாதிருக்க
மிருதுவான
பிரிய வார்த்தைகளாலான
எனக்கான
எனது மரணகீதத்தை
இயற்றித் தருகிறேன்
என் கல்லறையில்
அதை ஒரு முறை
ஒரே ஒரு தடவை
இசைத்து விடு!

---

ஞாபகம் இருக்கிறது. அப்புறம் நடந்ததென்ன ...? கண்விழித்த பொழுது யாருமே அருகிலில்லை. என்ன நடந்ததென்று புரியாதநிலை. எங்குமே சூனிய வெறுமை. சற்று நேரத்தில் அக்கா வருவது தெரிந்தது. அவள் முகத்தில் நிம்மதிக் கோடுகள் இளழயோடின.

''மங்களா! பெண் குழந்தை செத்துப் பிறந்தது. என் உதரத்தில் மலர்ந்த மலரைப் பார்க்க வேண்டும் என்று அங்குமிங்கும் ஆவலுடன் பார்க்கிறேன். ''அத்தான் புதைக்கக் கொண்டுபோய் விட்டார்.'' அக்கா தொடர்கிறாள். என்னுடல் எங்கும் நெருப்பாய் பற்றி எரிகிறது. எனனையறியாமல் கண்கள் பெருக்கெடுக்கின்றன. இறைவா இதிலுமா உன் சோதனை. என னுதிரத்தில் மலர்ந்த புஷ்பத்தை ஒரு கணம் கூட நான் பார்க்க முடியாமற் செய்து விட்டாயே! என் உதிர மலர் புதைக்கப்பட்டது கல்லறையா அல்லது என் இனிய நினைவுகள் உணர்வுகள் புதைக்கப்பட்ட இவ்வுடல் கல்லறையா? என்னை நான் கேட்கிறேன். இதயத்தைச் சேலைபோல் முறுக்கிப் பிழிவது போன்ற வேதனையில் நாட்கள் கழிகின்றன.

பத்து நாட்களின் பின் இரு இளம் பெண்கள் என் குடிசையில் வந்து அக்காவையும் அத்தானையும் ஏதோ விசாரிக்கின்றார்கள் பின் என்னை உலுக்கி எடுக்கிறார்கள்.

''நாங்கள் பெண்ணுரிமைக்காகப் பாடுபடுபவர்கள். பெண்களுக்கு நேரிடும் அநீதியை அவலங்களைத் துடைப்பவர்கள். அதனால் உன்னிடம் ஒரு விசாரணை செய்ய வேண்டும். பதில் சொல்வியா?'' நான் சம்மதத்திற்கறிகுறியாகத் தலையை அசைக்கிறேன். உன்க்குப் பேச வராதா?
வராதெனத் தலையை அசைக்கிறேன்.
உன்னை கெடுத்தவன் யார்?
நான் கையை விரிக்கிறேன்.
''ஏன் உனக்குப் பிறந்த பிள்ளையை மதகினுள் போட்டாய்? என் பிள்ளை உயிருடன் இருக்கிறதா? இவர்களுக்கு எப்படித் தெரியும் மீண்டும் தெரியாதெனக் கையை விரிக்கிறேன். கூடவே என் குழந்தை இறக்கவில்லையா? என்ற கேள்வியும் மனக்கொதிப்பும் எனக்குள் எழுகிறது. அக்கா பொய் சொல்லி என்னை ஏமாற்றிவிட்டாளா? அக்காவைப் பார்வையால் எரிக்கிறேன். அக்கா திரு திருவென்று விழிக்கிறாள் வந்த வந்த பெண்கள் இருவரும் அக்காவிடமும் விசாரணை செய்கிறார்கள் மீண்டும் என்னிடம் வந்து, உண்மையைச் சொல். உன்னை

ஏமாற்றியவன் யார்? ஏன் குழந்தையை எறிந்தாய். உண்மை சொன்னால் அவனை உன்னுடன் சேர்த்து வைப்போம். நான் எதுவுமே தெரியாதெனத் தலையையும் கையையும் ஆட்டினேன்.

''உண்மை சொல்லாவிடின் உனக்குத் தான் தண்டனை'' நான் பேசாமல் நிற்கி றேன்.

''நயமாய்க் கேட்டால் சொல்ல மாட்டாய் உன் போன்றோரால்தான் நம் பெண்குலத் திற்கே அவமானம் உண்மை சொல்கிறாயா இல்லை காவல் துறைக்கு வருகிறாயா?''

எவ்வித உணர்ச்சியையும் வெளிப்படுத் தாத என் கண்கள் அவர்களை வெறித்து நோக்குகின்றன.

சினமுற்ற அவர்கள் ''கட்டளை அனுப்பு கிறோம் வா'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்கள்.
கட்டளை வந்தது.

நானும் வந்து நிற்கிறேன். காவற்துறை யில் அதிலும் என் தோழிமுன் குற்றவாளி யாய், வேதனைகளும், சோதனைகளும், கொடுமைகளும் நிறைந்த கல்லறையாய் செய்யாத தவறுகளும் குற்றங்களும் சுமத் தப்பட்ட கல்லறையாய், உணர்வழிந்த உடல் கள் சடலங்களாகப் புதைக்கப்படும் பொழுது பூமி கல்லறையாகிறது. உணர்வுகள் அனைத்தும் சிதைக்கப்படும் பொழுது உணர் வழிந்த உடலே ஒரு கல்லறைதானே ஆண் மையை மதிக்காமல் மிதிக்கும் வரை பெண் ணும் கல்லறைதான் அதற்கு நானே உதா ரணம்.

''மங்களா விசாரணைக்கு வா'' அதோ சுகந்தா வேதனை பளிச்சிட வருகிறாள்.

இந்த உணர்ச்சியற்ற கல்லறையும் அவளை நோக்கி நகர்கிறது.

''என்ன நடந்ததென்று இதில் எழு தித்தா'' அவள் ஒரு பேனாவையும் பேப் பரையும் நீட்டுகிறாள். நான் அவற்றை விரக்திப் புன்னகையுடன் வாங்குகிறேன்.

''சுகந்தா! இருளில் என்னைக் கெடுத்த வனைச் சத்தியமாக எனக்குத் தெரியாது. அவனை அடையாளம் காண அவன் தலை மயிர் மட்டும் என்னிடமுண்டு. சேற்றில் மலர்ந்தாலும் செந்தாமரையெனக் குழந் தையை வளர்ப்போமென எண்ணினேன். மயக்கத்திற் பிறந்த குழந்தை இறந்தே பிறந்தது என்று அக்காவும் அத்தானும் உண்மையை மறைத்து விட்டார்கள். சிசு வைக் கொல்ல மனமின்றி அவர்கள் இவ் வாறு செய்திருக்கலாம். அவர்களுக்கு எவ் விதத் தண்டனையும் கொடுக்க வேண்டாம். கொடுத்தால் எனக்கிருக்கும் ஒரே ஆதரவும் அற்றுவிடும். ஆதலால் நானே முழுக் குற் றத்தையும் செய்ததாக விசாரணையை எழுதிவிடு, உலகமும் அவ்வாறே நினைக் கட்டும். என்ன தண்டனை என்றாலும் நான் ஏற்க எப்பவோ தயாராகி விட்டேன். ஏனெனில் என் மனதின் அழகிய நினைவு களும் மகிழ்ச்சியும் என்றைக்கோ உறை பனியாய் உறைந்து இறுகிவிட்ட கல்லறை நான். முடியுமானால் அந்தக் குழந்தையை எனக்கு மீட்டுத்தா.''

என் வாசகங்களைப் படித்த சுகந்தாவின் கண்களிலிருந்து அருவி சொரிகிறது. ஒரு கணந்தான் பின் அவளும் அதே இடத்தில் சிலையாகி விட்டாள். □

---

## சூரிய சக்தி

அவுஸ்திரேலிய பாடசாலை மாணவர் குழ ஒன்று சூரிய சக்தி மூலம் இயங்கக் கூடிய கட்டுமரம் ஒன்றைக் கட்டியுள்ளனர். இக் கட்டுமரம் இவ்வகையை ஒத்த படகுகளை விட 5 சதவீதம் திறமையாக செயற்படக் கூடி யது. சூரிய சக்தியால் இயங்கக் கூடிய கட்டு மரம் புதிய அமைப்பில் Divingcell வினால் அதாவது பாரமற்ற கடினமான பொருளால் ஆக்கப்பட்டுள்ளது. இதற்கென சிறப்பாக அமைக்கப்பட்ட எலெக்ரோனிக் கறுப்புப் பெட் டிகள் சக்தி வெளிப்பாட்டை அதிகரிப்பதோடு, கட்டுமரத்தின் மின் இயந்திரத்தின் திறமை செயற்பாட்டையும் அதிகரிக்கின்றது.

-Down to earth- June 1993

---

# உங்களோடு ஒரு நிமிடம்

திருமதி.
ஜே. எம்.
சிவப்பிரகாசம்

மனித வாழ்வின் மனித படைப்பின் அவனது வறுமை செழுமை களின் அத்திவாரக் கல் இறைவனின் கரங்களிலேயே தங்கியுள்ளது. இவ்வடிப்படையில், மனிதப் படைப்பில் சிலரிடையே நாம் காண்கின்ற ''ஊனம்'' என்பது கூட இறைவன் படைப்பின் இரகசியமே. இது ஏன் என்ற கேள்வி நமது சக்திக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் ஆரோக் கியமான அழகான அறிவான முழு மனிதராக தோற்றமளிக்கும் ஒருவன் கூட, எந்த நிமிடமும் ஊனமாகலாம். அல்லது உயிரைக் கூட இழக் கலாம். அதுவும் இன்று நமது மண்ணின் சூழ்நிலையில், இன்றைய நிகழ்வுகளையும் பொறுத்த வரை ஊனமும், உயிரிழப்பும் சர்வ சாதாரண விடயங்களாகி விட்டன.

எனவே இவற்றை கண் கூடாக கண்டு அனுபவிக்கின்ற நாம் ஊன முற்றவர்களை மற்றவர்களிடமிருந்து அன்னியப்படுத்திப் பார்ப்பது தவறாகும். மாறாக அவர்களை எங்களுடைய ஓர் அங்கம் என்பதை உள்ளூர ஏற்றுக் கொண்டு அவர்களது மனிதாபத்தையும், கௌரவத் தையும், சுதந்திரத்தையும், மதித்து அவர்களிடையே காணப்படுகின்ற ஆர்வங்களை ஆராய்ந்து அறிந்து அவர்களின் திறமைகளை வளர்த்து வளம்படுத்த ஊக்கம் கொடுக்க வேண்டும். இது ஒவ்வொரு மனிதனு டைய கடமையாகும்.

ஆனால் நாமோ ஊனமுற்றவர்களை வேண்டாதவர்கள், தகுதி யற்றவர்கள், நல்ல நிகழ்வுகளில் முன் நிற்கக்கூடாதவர்களாக சிலர் நினைப்பதுமுண்டு. நாம் எந்த நிமிடமும் ஊனமுற்றவர்களாய் வரக் கூடும். இதை நாம் உணர்வதில்லை.

ஒரு நிமிடம் இதை சிந்திப்போமாக.

1. ஊனம் என்பது என்ன?
2. அது நம்மை அணுகாதா?
3. ஊனமுற்றவர்களின் அறிவையும் திறமையையும் வளரச் செய்வதில் சமூகத்தின் தனி மனிதனின் பணி என்ன?

நான் ஊனமுற்றிருந்தால் சமூகத்தில் என்ன எதிர்பார்ப்பேன். கல்வி, வேலை வாய்ப்பு, தொழிற்பயிற்சி, சம அந்தஸ்து இவைகளை தான் ஊனமுற்றவர்கள் எதிர் பார்ப்பார்கள்.

சில ஊனமுற்றவர்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஊன முற்றவர்கள் இருக்கிறார்கள். படுக்கையில் அவர்களுக்கு நாங்கள் எங் களால் இயன்ற பொருள் உதவி செய்ய வேண்டும். ஊனமுற்றவர்கள் ஈனமுற்றவர்கள் அல்ல. சிலர் மிகுந்த ஞானம் உள்ளவர்கள், பலவழி களில் திறமையுள்ளவர்கள்.

அவர்களின் ஆற்றலை அறிந்து, வளர்த்து சமூகத்தில் அவர்களை ஒளிமயமான பாதையில் இட்டுச் செல்லும் பணியில் 16, கொழும்புத் துறை வீதி, ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அத்தோடு அப்பணியில் உதவவிரும்பும் உள்ளங்களை வரவேற்பதோடு, ஊனமுற்றோரை அனைத்து துறை யிலும் பயிற்சியளித்து வளம் பெறச் செய்வதில் ஒன்று சேருவீர். ☐

## நிலமகள்

இளமையின்
தேவதைக் கனவுகள்
தொலைந்த ஒரு தேவதையின்
கதை இது.

அந்த பூமி
விளைய முடியாமல்
தன்னுள் வேர்விட்ட
நாற்றுக்களைச் சிதைத்து
உலர்ந்து போனது
பூமி
இடம் பெயர்வதை
நீங்கள் அறிந்ததில்லை
அந்த நிலமகள்
தனக்குள்
குமுறி வெடித்துச் சிதறி
என்றுண்டு
இன்று
தொலைதூரம் பயணித்தாள்

இன்றவளொரு தோப்பல்ல
வெறும் தரை
கட்டாந்தரை

எனினும்
சில உணர்வுகள்
அவளிடம் மீதமிருந்தன

மழைதரும்
எந்த மேகமும்
இல்லை
அணைப்பதற்கு
எந்த மழைக்கரமும்
இனி இல்லை.

வெறும்
வெண்மேகம் பார்த்து
வெயிலை
வெறித்து வெறித்து
பூத்துப்போன
நிலமங்கை கண்கள்
ஓர் நாள் மூடும்

என்
இதயத்தின் கண்கள்
ஒரு சொட்டுநீர்
அவள்
மேனியில் சொரியும்
அவள்
உயிர்த் தெழமாட்டாள்

ஏனெனில்
அவள்
''எதிர் பார்த்த மழைத்துளி
நானல்ல ☐

செல்வா




---

## காலக்குயில்

பேனாக் காரர்களே!
சீதனப் பேய்தனைக் கலைப்பதாய்
சீர்திருத்த எழுத்துக்கள் வேண்டாம்!
இராம வேஷத்து இராவணர்களே!
சீதைகள் இனியும் சிறைப்படார்!

★ மானிலா

# விடியலைத் தேடும்...

★ குணா சிதம்பரநாதன்



சீதனம் சீர்வரிசை
வாங்குவதனை
சட்டம் போட்டு
தடுத்திட வேண்டும் - என்று
உரத்துப் பேசினர் - ஆனால்
மேடைப் பேச்சுக்கள்
கேலிக் கூத்தாய்
போனது தான் மிச்சம்
பெண்ணினத்தின் விடுதலைக்கு
கிராமம் தோறும்
மாதர் சங்கங்கள்
எழுச்சி பெற்றன
இவ்வளவும் நடந்தும்
பயன் ஏது?
கொடுக்கும் கூட்டம்
இருக்கும் வரைக்கும்
ஏட்டுச் சுரக்காய்
கறிக்குதவாது
என்ற கதையது ஆச்சு
ஏனென்றா கேட்கிறீர்?

வெளிநாடு வெளிநாடு என்று
உள்நாட்டவர் எல்லாம்
வெளிநாடு சென்றதனால்
வந்து குவிந்ததிங்கு
டொலர் பவுண் றியால்...
என்று வகைவகையாய்
அத்தனையும் வந்ததனால்
அல்லர் உற்றனர் பிறர்
ஆர்ப்பரித்தனர் சிலர்


ஏனென்றால்?
கலியாணச் சந்தையிலே
மாப்பிள்ளையின் விலையோ
கடுகளவும் குறையவில்லை
இலட்சக் கணக்கில்
உயர்ந்து சென்றது

பேரம் பேசும்
கூட்டமிங்கு
ஏலம் போட்டது
கூடக் கேட்கும்
கூட்டத்திற்கு
கூடியவிரைவில்
சம்மதமளித்தது
மணவறையதனில்
இடம் பிடிக்க
போட்டியும் போட்டது.

சீதனம் சீர்வரிசை...
என்று எக்காளமிடும்
எம்மினத்தின் நிலையது
மாற வேண்டுமாயின்
மருந்தது உன் கையில்
மறந்து விடாதே - மங்கையே
சீதனம் கொடுக்கும்
கூட்டமதில்
சேர்வதிலும் பார்க்க
எம்மினத்தின் விடுதலைக்காய்
உழைத்திட எண்ணி
கரண்டி பிடித்த கையதில்

துப்பாக்கி ஏந்தவும்
தயங்கி விடாதே
புரட்சிப் பெண்ணாய் நீயும்
மலர்ந்திட வேண்டும்.

பதுமை என்று
பட்டம் பெற்றவள்
நிலைமை இன்று
மாறியததனால்
நிமிர்ந்து நிற்க
கற்றுக் கொண்டனள் - என்று
வரலாறு கூறட்டும்
கழுத்தில் நஞ்சுடன்
மண்விடுதலைக்காய்
களத்தில் ஆடும
கூட்டம் ஒன்றும்
எம்மலர் மத்தியில் இருக்க
சீதனம் சீர்வரிசை
கார், பங்களா, சீன இந்தி - என்று
ரொக்கம் . , .
வாங்கும் கூட்டம் இங்கு
குறைந்ததும் உண்டோ?
இதுவரையில் . . , ,
உயர்ந்ததே உண்மை
இன்நிலை என்று மாறும்
அன்று தான்
வசந்தம் எம் வாழ்வில்
கையசைக்கும்
அதுவரை
விடியலைத் தேடும்
கன்னியர் கூட்டம்
காத்திருக்கும்
விடியலை நோக்கி
அதுவரை
விடியாத இரவுகள்
தான் பெண்ணினத்திற்கு



# போலி மாத்திரை

உதட்டில் மலர்ந்த
உன் சிரிப்பு
நிஜமென நினைத்தேன்
ஆனால் அது
காய்ந்த சருகென
காற்றில் பறந்தது

கனிவான உன்
பார்வை
காந்தமாய்
இழுத்ததென்னை
கனிந்த என்
நினைவலைகள்
கவி படைக்கத்
தொடங்கும் போது
கருமுகில் போல்
கலைந்து போனது,
இதமான உன்
பேச்சும்
அளவான தீந்தமிழும்
அகத்திற்கு அமைதி
தருமென எண்ணி
அன்போடு அணைத்
தேன்
அப்போது தான்
அத்தனையும்
புரியாத புதிராக
போன இடம்
தெரியவில்லை.

உதவியெனக் கரம்
கொடுத்தாய்
ஊன்றுகோலாய்
தழுவிக்கொண்டேன்
உண்மை அன்பு
உன்னிடம் தான்
உள்ளத்தில் நீ
என்றாய்
ஒரு நிமிடம்
பேசிய பின்
ஒடிந்தேன் உன்
குழி பறிப்பில்

இப்போது உன்
உறவு
பட்டுப்போன என்
கண்ணுக்கு
கெட்டுப்போன
சூரியநமஸ்காரம்
மெதுவாக
மீண்டும் தொடரும்
உன் அன்பு
மெல்ல மறந்த
போலி மாத்திரை.

மேரி மன்ரேசா
பறுநாந்து

# இலை மறைகாய்

மலரன்னை

அன்றைய காலைப் பொழுது மப்பும் மந்தாரமுமாக இருந்தது. கதிரவனின் கதிர்களைக் காணக் கிடைக்கவில்லை. காலையில் இதமாக வீசித் தழுவும் இளந்தென்றல் அன்று வீச மறந்து விட்டதால் மரம் செடிகள் எல்லாம் துக்கம் அனுஷ்டிப்பவை போல் ஆட்டம் அசைவின்றி மௌனமாய் நின்றன.

அந்த வீட்டு முற்றத்தில் சுருண்டு படுத்திருந்த நாய் ஒன்று தலையை உயர்த்திப் படலையைப் பார்த்து உறுமி விட்டு மீண்டும் சுருண்டு விட்டது. அடுக்களைக்குள் இருந்து எட்டிப் பார்த்த தங்கம்மா, ''சனியன் பிடிச்ச நாய். இரவு முழுவதும் ஊளையிட்டு மனிதரை ஒருகண் தூங்கவிடவில்லை, இப்பு பார்! சுருண்டு கொண்டு கிடக்கிறதை, என்ன அறிவுக்குத் தான் நாய் இப்பிடி ஊளையிட்டுதோ!'' என்று புறுபுறுத்தவாறு, ம்!...... என்ற நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தினாள்.

எங்கேயோ தொலை தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் அவளது காதில் விழுந்தது. உடனே அவள் பதற்றத்துடன் வீட்டு முற்றத்துக்கு விரைந்து வந்து நின்றவள், சுற்று முற்றும் திரும்பி எத்திசையிலிருந்து சத்தம் கேட்கிறதென உன்னிப்பாகக் கவனித்தாள்.

''அது எங்கையோ தூரவாய்க் கேக்குது. நான் நினைச்சன் 'துலைவான்கள்' எங்கடை ஒழுங்கையாலதான் வாறாங்களாக்கும் எண்டு.''

சொல்லியவாறே பின் வாங்கித் தனது அலுவல்களைக் கவனிக்கலானாள். ('துலைவான்கள்' தங்கம்மாவினால் அமைதி காக்கவென வந்த அந்நியப் படையினருக்கு சூட்டப்பட்ட நாமம்.)

''அம்மா!''

அவளது மகள் சாந்தி அழைத்தாள். ''நான் இண்டைக்கு ரியூசனுக்குப் போகேல்ல, ஸ்கூலுக்குத் தான் போகவேணும். அவசரமில்லை. நீங்கள் ஆறுதலாய்ச் சாப்பாடு செய்யுங்கோ.''

மகளைத் திரும்பிப் பார்த்த தங்கம்மா, ''ஏனடி சாந்தி! ஏன் இண்டைக்கு ரியூசன் இல்லையே!''

''எனக்குத் தலையிடிக்கு அம்மா. அதுதான் போகாமல் விடப்போறன். 'பனடோல்' போட்டுப் பாப்பம். சுகமாயிருந்தால் பாத்துப் பள்ளிக்குப் போவம் எண்டு நினைக்கிறன்.''

''தலையிடிச்சால் சுடச் சுடக் கோப்பி ஒண்டு போட்டுத் தாறன் குடிச்சிட்டுக் கொஞ்ச நேரம் படுத்திரடி பிள்ளை. தலையிடி சுகமாய்ப் போயிடும்.''

சொல்லிக் கொண்டே கோப்பியைக் கலந்து மகளிடம் கொடுத்தாள். ''சாந்தி கோப்பியைக் கையில் வாங்கிக் கொண்டே 'பனடோல்' தேடிப் போனாள்.

தங்கம்மா குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போனாள். தண்ணீரை அள்ளிக் குடத்தினுள் நிரப்பிக் கொண்டிருந்த வேளை, அடுத்த வீட்டுக் கோழிகள் கொக்கரித்துக் கொண்டே வெருண்டோடி வந்தன. அவளுக்கு மனதுக்குள் 'திக்' என்றது. கோழியளைப் பிடிக்கிற 'துலைவான்கள்' உங்கினைக்க நிக்கிறாங்களோ என எண்ணியவாறு திரும்பித் திரும்பிப் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. இருந்தாலும் திடுக்கிட்ட அவளது இருதயம் வேகமாக அடித்தது. மளமளவென்று நீரை நிரப்பிக் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தபடி அடிக்களைக்குள் நுளைந்தாள்.

முற்றத்தில் சுருண்டு படுத்திருந்த அவர்களது நாய்

## மகாநாடு

எதிர்வரும் பத்தாண்டுகளில் இளைஞர் அந்தஸ்த்தை முன்னுரிமைப்படுத்தும் குடித் தொகையும், அபிவிருத்தியும் தொடர்பான ஐ. நா மாநாடு 1994 செப்ரெம்பர் 5 – 13ல் கைரோவில் நடைபெறவுள்ளது. அரச பிரதி நிதிகள் கலந்து கொள்ளும் இம் மாநாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களும் பிரதான பங்கை வகிக்கவுள. குடுப்பத் திட்டமிடல், சூழல் பாதுகாப்பு, பெண்கள் தொடர்பான விடயங்கட்கு இம்மாநாட்டில் முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளது. ●

---

இருந்தாற்போல் அவலமாகக் குரைக்கத் தொடங்கியது. யன்னலினூடாக எட்டிப்பார்த்தவள், படலைக்கு மேலால் தெரிந்த தலைப்பாகையைக் கண்டு விட்டாள். அவளுக்கு விஷயம் புரிய வெகுநேரம் பிடிக்கவில்லை. தங்கம்மா மகளிடம் ஓடிப்போய்விட நினைத்தாள். அதற்கு அவகாசமில்லாமல் ஒரு இராணுவத்தினன் வீட்டுக்குள் நுழைந்திருந்தான்.

“எல். ரி. ரி.” என்று கூறி, ஏதோ விளங்காத பாஷையில் கத்தினான். தங்கம்மா ‘இல்லை’ என்பதற்கு அடையாளமாகக் கையை விரித்துக் காட்டினாள்.

வீட்டைச் சோதனையிடப் போவதாகச் சைகை மூலம் காட்டி ஏதோ கத்தினான் அவ்வன்னியன். தங்கம்மா அச்சத்துடன் மிரண்டுபோய் நின்றாள்,

ஆரவாரங்கேட்டுச் சாந்தி தாயிடம் ஓடி வந்தாள். அவளுக்கு ஓரளவு நிலைமை புரிந்து விட்டது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு துணிவை வரவழைத்துக் கொண்டாள்.

“அம்மா! பயப்பிடாதையுங்கோ. அவை வீட்டைப் பார்க்கிறதெண்டால் பார்க்கட்டுமன்” என்று கூறியவள், தாய்க்குக் கிட்டப் போய் அவளுடன் நெருங்கி நின்று கொண்டாள்.

அதற்குள் இன்னொரு குள்ளமான இராணுவத்தினன் கோடிப்புறத்திலிருந்து வீட்டிற்குள் புகுந்தான். அவன் இரைந்து ஏதோ சொல்லவே, தலைப்பாகை அணிந்த அந்த இராணுவத்தினன் அடுக்களைப் பக்கமாகப் போனான். குள்ளமானவன் அறைக்குள் புகுந்து எதையெதையோ புரட்டி, உருட்டும் சத்தம் கேட்டது.

இவ்வளவிற்கும், தாயும் மகளும் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. தேடி முடிக்கட்டும் என்ற நோக்கத்தோடு இருவரும் மௌனமாக நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பேசிக்கொள்ள நாவெழுந்தால்தானே. மௌனமே அங்கு பாஷையாயிற்று.

மறு விநாடி குள்ளமான இராணுவத்தினன் வெளியே வந்து சாந்தியைப் பார்த்துப் பல்லை இளித்தான். சாந்தி முறைத்துப் பார்த்தவாறு பேசாமல் நின்றாள்.

“வோட்டர்! வோட்டர்!;” என்று என்று சத்தமிட்டவன், குடிப்பதுபோல் சைகை காட்டினான். சாந்திக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. கிணற்றடியைச் சுட்டிக் காட்டினாள்.

இராணுவத்தினன், “நோ! நோ!! டீ... டீ...” என்று இளித்தான். சாந்தி ‘இல்லை’ என்பது போல் சைகை காட்டினாள். அவளது துணிவான போக்கு அவனுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியது போலும். அவர்களை நெருங்கியவன், கையில் வைத்திருந்த தடியினால் தங்கம்மாவின் முதுகில் ஓங்கி அடித்தான்,

“ஐயோ!......”

என்ற அலறலுடன் தங்கம்மா நிலத்தில் சுருண்டு விழுந்தாள். முதுகில் பட்ட அடியின் தாக்கத்தினால் அவளுக்கு நெஞ்சை வலித்தது. பேதை அப்படியே மயங்கிப் போனாள்.

இதைக் கண்ணுற்ற சாந்திக்கு இரத்தம் கொதித்தது.

ஆத்திரத்தில் கை கால் வெடவெடுத்தன. எதற்கும் துணிந்து விட்ட நிலையில் அவள் நின்று கொண்டிருந்தாள்.

திடீரென அவளை நெருங்கிய அவன், அவளது சேலையைப் பிடித்துத் தாறுமாறாக இழுத்தான். சாந்தியின் மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது. அவள் எதிர்க்க முயலாததால் அவள் எதிர்க்க முயலாததால் அவனது உற்சாகம் கரை புரண்டோடியது. அவனது முகத்தில் ஒருவித வெறி.

அறைக் கதவை அவன் [illegible]மித்தபோது சாந்தி கதவில் தடக்கென இடறி விழுந்து விட்டவள் போல் நடித்தாள். விழுந்தவள் தன் முழுப் பெலத்துடன் அந்தக் காமுகனது கால் ஒன்றைப் பிடித்து இழுத்தாள். எதிர்பாராத இந்த நிகழ்வால் அந்தக் காமுகன் நிலை தடுமாறிக் கிடக்கையில், அவனது தோளில் மாட்டப்பட்டிருந்த ஆயுதம் சற்றுத் தள்ளிப் போய்க் கிடந்தது. இந்தக் குறுகிய நேரத்தில் தன் மதிநுட்பத்தைப் பயன்படுத்திய சாந்தி, மின்னல் வேகத்தில் எழுந்தாள். இந்நேரம் அவளுக்கு கதவின் பின் சாத்தி வைக்கப்பட்டிருந்த 'பாரடி' கைகொடுத்தது. எடுத்தவள் தன் பலமனைத்தையும் ஒன்று திரட்டி, அவன் எழ முயற்சிக்கையில் ஓங்கி ஒன்று மண்டையில் போட்டாள்.

'படீர்!'......

அடுத்த கணம், ஆ!...... என்றொரு அலறல். மண்டை நொருங்கி இரத்த வெள்ளத்தில் நீந்தினான் அவ்வன்னியன். அவனது உடல் ஒருமுறை துடிதுடித்துத் தணிந்து போனது.

சத்தம் கேட்டுத் தலைப் பாகை அணிந்த இராணுவத்தினன் தனது துப்பாக்கியைத் தயார் நிலையில் வைத்தபடியே அவ்விடத்திற்கு விரைந்து வந்தான். நிலைமை அவதானித்த அவனது கை துவக்கின் விசையை அழுத்தியது.

டுமீல்!...... டுமீல்!......

அவனது துப்பாக்கி கக்கிய சன்னங்கள் சாந்தியின் நெஞ்சை ஊடுருவின. சாந்தி துவண்டு விழுந்தாள். அவளது நெஞ்சிலிருந்து இரத்த அருவி பெருக்கெடுத்தது.

அந்த இராணுவத்தினன் ஏதோ பேயைக் கண்டு மிரண்டவன் போல் கத்திக் கொண்டே ஓட்டமெடுத்தான்.

அம்மா... அம்மா!... தண்ணீர்... என அனுங்கினாள். விழுந்து கிடந்த தங்கம்மாவின் மயக்கம் தெளிகையில், சாந்தியின் குரல் அவளது காதுக்கு எட்டியது.

தங்கம்மாவிற்கு அசாத்தியமான துணிச்சல் ஒன்று ஏற்பட்டது. மெல்ல எழுந்தாள். அடுக்களைக்குள் போய்த் தண்ணீரை டம்ளர் ஒன்றில் வார்த்து வந்தாள். மகளை நெருங்கித் தண்ணீரை மெல்ல வாய்க்குள் ஊற்றினாள்.

தண்ணீர் உள்ளே போனதும் சாந்திக்குச் சிறிது தெம்பு ஏற்பட்டது. சாந்தி வெகு சிரமப்பட்டுத் தனது பிராணனைச் சேர்த்து சக்தியினைத் வார்த்தைகளை வெளியிட்டாள்.

“அ...ம்...மா... க...வலை...ப்... ப...ட...ா...தை... யு...ம்...கோ நா...ன்... போ...ழ...யா...ம்... சா...கே...ல்...ல... அம்...மா!...” தொடர்ந்து பேசமுடியாமல் மூச்சுத் திணறியது.

ஒரு விக்கலுடன் சாந்தியின் தலை சரிந்தது. கண்கள் குத்திட்டு நின்றுவிட்டன. தங்கம்மா, ஐயோ! சாந்தி! என்று கதற வாயெடுத்தவள் அப்படியே மகளின் பிணத்தின் மீது மயங்கிச் சாய்ந்தாள்.

பேரிரைச்சலுடன் வாகன அணி ஒன்று அந்த ஒழுங்கைக்குள் வந்து நின்றது. திமுதிமுவென பல பூட்ஸ் அணிந்த கால்கள் அவ்வாகனங்களிலிருந்து குதித்தன. ஆர்ப்பரித்த வண்ணம் அங்குமிங்கும் சிதறி ஓடித் தங்கம்மாவின் வீட்டை முற்றுகையிட்டன. அவற்றுள் சில வீட்டினுள்ளும் புகுந்து அங்குள்ள பொருட்களை வேட்டையாடின.

சில பெறுமதி வாய்ந்த பொருட்கள் அவர்களது பைகளுக்குட் போயின.

முன்னர் வந்துபோன தலைப்பாகை அணிந்த இராணுவத்தினன் மட்டும் உடல்கள் கிடந்த அறைக்குள் நுழைந்தான். சாந்தியின் உடலின் முன் நின்றுவிட்டான். அவனுக்கு மட்டுமே தெரிந்திருந்த அப் பெண்ணின் வீரத்தை மதிக்க அவன் தவறவில்லை. பின்னர் அவன் தனது சகாக்கள் ஒருவனை அழைத்து வீழ்ந்து கிடந்த இராணுவத்தினனின் உடலைத் தூக்கிக் கொண்டு போய் டிரக் வண்டியில் ஏற்றினர்.

இதற்குள் தங்கம்மாவின் வீட்டு வேலிகள் யாவும் பிய்த்துக் கொளுத்தப்பட்டன. இருவர் சேர்ந்து ஒரு பொதியைச் சுமந்து வந்து வீட்டின் மையத்தில் வைத்தனர். அதிலிருந்து நீண்ட வயர்கள் பொருத்தப்பட்டு அவை தொலை தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டன. உயரமான தோற்றத்தையுடைய ஒருவன் ஏதோ பெரிய குரலில் உத்தரவு பிறப்பித்தான். அனைவரும் ஓடிவந்து ஒழுங்கைக்குச் சற்றுத் தொலைவில் நின்று கொண்டனர். விசில் சத்தத்தைத் தொடர்ந்து, [illegible]...

அந்த ஊரே அதிர்ந்தது. தங்கம்மாவின் வீடு இப்போது தரைமட்டமாகி இருந்தது. கூரையிலிருந்த மரங்களும், ஓடுகளும் பிறபொருட்களும் சலசலவென்ற இரைச்சலுடன் சுற்றுமுற்றும் தூக்கி வீசப்பட்டன. வீடு மட்டுமா தகர்க்கப்பட்டது? தங்கம்மாவின் உயிருள்ள உடலுமல்லவா உருக்குலைந்து சின்னாபின்னமாகியது. அந்நியப் பேய்களின் வெறியாட்டம் அத்துடன் அடங்கிப் போயிற்று.

தங்கம்மாவின் உடைமை என்று மிஞ்சியதெல்லாம் அவள் வளர்த்த நாய் ஒன்று தான். அதுதான் இன்னமும் ஊளையிட்டவாறு இடிவுக்குள் வளைய வருகிறது.

நாயின் ஊளைச் சத்தத்தைக் கேட்டு யாரோ ஒருவர் கூறினார். "இன்னும் உந்தப் பக்கத்திலை நாய் ஊளையிடுகிறது. ஒன்றுமே அறியாத தங்கம்மா குடும்பத்தை வீட்டோடை சேர்த்து எல். ரி. ரி.'எண்டு அழிச்ச பாதிரி, இன்னும் ஆர் ஆருக்கு அழிவு நெருங்குதோ! ஆர் கண்டது"

இலையன்றி காயாகிவிட்ட சாந்தியின் வீரச் செயலால் ஏற்பட்ட விளைவுதான் அது [illegible] போகிறது. □

---

காலம் வரும் வரை காத்திருக்காதே
கடமை பல உண்டு பெண்ணே எழுந்துவா

---

**ஒரு பிஞ்சுவின் பிரகடனம்**

எனக்கு
ஊட்டிப் பார்க்க
உனக்கு
ஆசைதான் அம்மா!
வறுமை கட்டி
தூக்கிய
எலும்புக் கூடான
உன் உடலில்
ஓடும்
என்னை தீட்டிப் பார்த்த
குருதியையா
நான்
உறிஞ்சிப் பார்ப்பது
வேண்டாம்.
அம்மா! நான்
"அங்கங்கள் விற்கும்
தங்கத் தீவிலே
சிரிக்கும் "டொலர்"
" எத்தியோப்பியாவில்
உயிர் மட்டுமே
ஊசலாடும்
எலும்புக் குச்சி"
நாளைய
சிவகாசியின்
சின்ன இயந்திரம்!
கொழுந்து பூமியிலே
பிள்ளைக் காமராவின்
அனாதை ஆத்மா!
உன் மடி மட்டுமே
என் அடையாள அட்டை
நீ ஊட்டும்
பால் மட்டுமே
என் உயிரின் சீட்டை!

★ குன்றின் குரல்

# மகளிர் தின விழா

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்து நடத்திய மகளிர் தின விழா 1994 மார்ச் 10ம் திகதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ் இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற மாபெரும் விழாவில் மகளிர் தினத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. யாழ் நகரின் பிரதான கல்லூரிகளின் மாணவர்களும் மாணவிகளும் பங்கு கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விவாத அரங்கு மிகத் தெளிவாக மகளிர் எதிர்நோக்கும் பிரச்சனைகளை இளம் பிராயத்தினர் மத்தியில் துல்லியமாக மனதில் பதியவைத்த நிகழ்ச்சியாக அமைந்தது.

விவாத அரங்கில் "பெண்களின் விடுதலை உணர்வு பாரம்பரிய பால் வேறுபாட்டில் சமன்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. என்ற தலைப்பில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து விவாதிட்ட யாழ். வேம்படி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தினையும், "பெண்ணுக்கு பெண்ணே எதிரி" என்ற தலைப்பில் யாழ். இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து வாதிட்ட யாழ். இந்துக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும், "வெகுசன தொடர்பு சாதனங்கள் பெண்மையை இழிவு படுத்துகின்றன" என்ற தலைப்பில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்கள் வாதிட்டனர். இதில் இரண்டு கல்லூரிகளும் திறமையாக வாதிட்டமையால் இரு கல்லூரிகளும் 3-ம் இடத்தை தழுவிக் கொண்டன. இம் முடிவுகளை திறமையாக வெளியிட உதவி நடுவர்களாகப் பணியாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி நுண்கலைத் துறைத் தலைவர் யாழ். பல்கலைக்கழகம், திருமதி புஸ்பா சின்னையா அதிபர் விக்னேஸ்வரா கல்லூரி, நல்லூர், திருமதி கோகிலா மகேந்திரன் பகுதித் தலைவர் யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை ஆகியவர்கட்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் பெருமதிப்பளிக்கின்றது.



கலை நிகழ்ச்சிகட்கு பிரதம அதிதியாக வருகை தந்து சிறப்பித்த திருமதி புஸ்பா கணேசலிங்கம் பிரதி கல்விப் பணிப்பாளர் அவர்கட்கும் மகளிர் அபிவிருத்தி நிலையம் கடமைப்பட்டுள்ளது. மாலை நிகழ்ச்சிகளில் பிரதானமான நிகழ்ச்சியாக ஆற்றலால் உயர்ந்த சிறந்த பெண் மணிகளைப் பொன்னாடை போர்த்தி, கௌரவித்த நிகழ்ச்சி மிக சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மாலை நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி வசந்தமாலிகா கருணாகரன் யாழ். பல்கலைக் கழகம். குழந்தை மருத்துவத் துறை தலைவர் தலைமை தாங்கினார்.

★★★★★★★

10 - 03 - 94

★★★★★★★

மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன். வரவேற்புரை வழங்கியதைத் தொடர்ந்து மகளிர் கௌரவிப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் மேலதிக அரச அதிபர் யாழ்ப்பாணம், செல்வி திலகவதி பெரியதம்பி கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணம், செல்வி புஸ்பா செல்வநாயகம் இளைப்பாறிய ஆசிரியை, வைத்திய கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி மருந்தியல் துறை யாழ் பல்கலைக்கழகம், வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினம் பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலை, திருமதி கோகிலா மகேந்திரன் பகுதித்தலைவர் யூனியன் கல்லூரி, திருமதி சாந்தினி சிவனேசன் நடன ஆசிரியை, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய், செல்வி தனிகைச் செல்வி யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் மகளிர் பிரிவு ஆகியோர் இம் மகளிர் தின விழாவில் கௌரவிக்கப்பட்டனர். இவர்கட்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதற்காக யாழ் கல்லூரிகளின் பிரபல பாடசாலை அதிபர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். திருமதி எல். பி. ஜெயவீரசிங்கம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர், திருமதி புஸ்பா சின்னையா விக்னேஸ்வரா கல்லூரி அதிபர், திருமதி பி. எவ். சின்னத்துரை சென்சாள்ஸ் வித்தியாலய அதிபர், திருமதி சரஸ்வதி ஜெயராஜ் யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் ஆகியோர் இவர்களுள் அடங்குவர்.

மாலையில் இடம் பெற்ற கலை நிகழ்வுகளில் ஸ்வரராகலய விநோதசுரபி திரு எல். திலகநாயகம் போல் அவர்களது இன்னிசைக் கச்சேரியும் அவரது மாணவிகளினது இசைக் கச்சேரியும் எல்லோர் மனதையும் கவர்ந்தன. அத்துடன் யாழ் திருக்குடும்பக் கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலை மாணவிகளினது கலாச்சார நடன நிகழ்ச்சி யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கிய கோலாட்ட நிகழ்ச்சிகள் பாலர் உள்ளங்களிலும் நீங்கா நினைவுடன் நிற்கும் நிகழ்ச்சிகளாகும். மகளிர் தின விழாவில் மகளிர் எதிர் நோக்கும் பிரச்சனைகள் கோடிட்டுக் காட்டப்படுவதோடு அவர்கள் பெருமை முக்கியம் என்பனவும் யாவற்கும் உணர்த்தப் பட்டவை சிறப்பான அம்சங்களாகும்.

*தமது ஆற்றலால் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் ஒன்பது மகளிர் இவ் ஆண்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களது ஆற்றல் ஆளுமையின் சுருக்க விளக்கம் இங்கு தரப்படுகிறது.*

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

**'சிவத்தமிழ் செல்வி, துர்க்கா துரந்தரி''**

தெல்லிப்பளையில் 1925-ம் ஆண்டு பிறந்த இவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் தனது ஆரம்ப கல்வியை கற்றார். பண்டிதர். சைவப்புலவர் பரீட்சையில் தேறிய இவர் பயிற்றப்பட்ட 1-ம் தர ஆசிரியராக 1945 முதல் 1976 வரை 31 வருடகாலம் ஆசிரியையாக அரும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தமிழ் இலக்கியம், பண்பாடு, சமயம் சார் துறைகளில் 1958-ம் ஆண்டு முதல் இலங்கையிலும் பிறநாடுகளிலும் சொற்பொழிவாற்றி அறிவுப் பரவல் பணியாற்றி வருகின்றார். இவருடைய சமூக சேவையைக் கௌரவித்து சிறிலங்கா அரசு 1978 இல் சமாதான நீதிவான் பதவி வழங்கிற்று. 1990-ல் கலாசூரி விருதினையும் 1993-ல் கொண்டு சிரோமணி விருதினையும் வழங்கி மீண்டும் மீண்டும் கௌரவித்துள்ளது. இந்திய ஆதீனங்கள், மலேசியாவைச் சேர்ந்த சங்கங்கள் பலவும், இலங்கைச் சங்கங்கள் பலவும் பல்வேறு விருதுகளை இவருக்கு வழங்கி கௌரவித்துள்ளன. ஈழ மன்றங்

கள் வழங்கிய கௌரவபட்டங்களில் 1971 இல் வழங்கப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி எனும் பட்டம் இவருக்கு மிகப் பொருத்தமானதே. இவர் எழுதிய நூல்களிலே கந்தபுராணச் சொற்பொழிவுகள் என்ற சொற்பொழிவுத் தொகுப்பு நூலிற்கு 1978 இல் சாகித்திய மண்டலம் பரிசு வழங்கிக் கௌரவித்தது.

சமூக, சமயப் பணியில் சிறந்து விளங்கும் இவர் 1964 ஆம் ஆண்டு முதல் சிறீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவராகவும் 1982 ஆம் ஆண்டு முதல் தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளிர் இல்லத் தலைவியாகவும் சமய, சமூகப் பணியாற்றி வருகின்றார்.

மேலும் கைதடி சைவச் சிறார் இல்லம், தெல்லிப்பளை நலன்புரிச் சங்கம், நல்லை ஆதீனம், வலிவடக்கு செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றினூடாக சமூகப் பணியாளராகத் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றார். அரசாங்க தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல சமூக நிறுவனங்களிலும் அங்கத்தவம் வகிக்கும் இவரது சமூக சேவை இத்துடன் நின்றுவிடவில்லை. பல அறக்கட்டளைகளை நிறுவி இலக்கிய கலாச்சார, சமய நற்பணிகளுக்காக புலமைப்பரிசில்களையும் வழங்கி சமய கலாச்சார இலக்கியப் பணிகளை ஊக்குவித்து தமிழ் வளர்க்கும் நற்பணியில் ஈடுபட்டு வருவதில் இன்றும் அயராது உழைத்து வருகிறார். இவரை மகளிர் அபிவிருத்தி நிலையம் கௌரவிப்பதில் பெருமையடைகிறது.

● □ ● □ ●

## திருமதி. சாந்தினி சிவனேசன்

நடன விரிவுரையாளர்,
ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.

இவர் யாழ் குடாநாட்டின் கலை மலிந்த கொக்குவில் பதியில் ஆடற்கலைக் குடும்பத்தில் பிறந்தவர். நடன வல்லுனர் கலைச்செல்வன் திரு. ஏரம்பு சுப்பையா அவர்களின் சிரேஷ்ட புதல்வி. அவருடன் பிறந்தவர்கள் பாடல், ஆடல், மிருதங்க, லய இசைகளில் வல்லவர்கள். இவர் பரத நாட்டியம், கதகளி இரண்டையும் தமது தந்தையிடமே கற்றுத் தெளிந்தவர்.

திருமதி. சாந்தினி சிவனேசன் அவர்கள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் 18 ஆண்டுகள் நடன ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவின் பகுதி நேர விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். அகில இலங்கை ரீதியில் நிகழ்ந்த நாட்டியப் போட்டிகளில் இவரது மாணவர்கள் முதலிடம் பெற்று வந்தனர். இவர் தயாரித்தளித்த நாட்டிய நாடகங்கள், தனி, குழு, நாடகங்கள் என்பன பல்கலைக்கழகம், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கலாபவனம் வாயிலாக நாடெங்கணும் அரங்கேறின.

இதுவரை 10 மாணவர்களை அரங்கேற்றினார். இவரது மாணவர்கள் பலர் பிற நாடுகளில் இக்கலையை வளர்த்து வருகின்றனர்.

கொழும்பு, கண்டி, பேராதனைப் பல்கலைக்கழகம், திருகோணமலை முதலிய இடங்களில் இவர் தாமே ஆடியது, பத்திரிகைகள் அவ்வப்போது அவரைப் பற்றி எழுதிய கட்டுரைகள், செவ்விகள் இவர் திறமையைக் கோடிட்டுக் காட்டும்.

வட இலங்கை சங்கீத சபையின் நிர்வாக அங்கத்தவராக பணியாற்றும் இவர் ஆசிரியர் தரத்தின் பிரதான பரீட்சகராகவும் விளங்கி இதன் வளர்ச்சிக்குத் தமது அறிவினைப் பகிர்ந்தளித்து வருகிறார்.

பத்மஸ்ரீ அடையாறு லக்ஷ்மணன், கோபா குரு, கோபிநாத் ஆகிய இருவரிடமும் முறையே பரதமும் கதகளியும் மேலும் கற்றுத் தெளிந்தவர்.

தமது ஆறாவது அகவையில் அரங்கு கண்ட சாந்தினி அவர்கள் பந்தனை நல்லூர் பாணியை எண்ணிறந்த மாணவர்க்குப் பகிர்ந்தளித்து வருகிறார். இக் கலைமாமணியை மகளிர் அபிவிருத்தி நிலையம் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றது.

● □ ● □ ●

# திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல்

மேலதிக அரச அதிபர்
யாழ். மாவட்டம்

இவர் வடமராட்சி, கரவெட்டியில் சிதம்பரப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளாவார். இளமையிலேயே சகலதுறைகளிலும் முன்னணி வகித்த இவர் தனது 16-ம் வயதிலேயே பாலபண்டிதப் பரீட்சையிலும், பின் சைவப் புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்தார். இவர் ஒரு எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர், கட்டுரையாளராக இலக்கியத்துறையில் முத்திரை பதித்தவர்.

அகில இலங்கை ரீதியில் 1962 இல் ''கலைச்செல்வி'' நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர். அறுபதுகளிலும் எழுபதுகளிலும் ''சிதம்பரபத்தினி'' ''சித்தி'' ஆகிய புனை பெயர்களில் பல சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகளை ஈழத்து சஞ்சிகைகள் பலவற்றில் எழுதியவர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்விபயின்ற காலத்தில் பல கவியரங்குகளில் பங்குபற்றி தனது ஆற்றலை வெளிக்காட்டியவர். பல்கலைக்கழக இந்துமன்ற ஏடான இந்து தர்மத்தின் இணையாசிரியரகவும் பணிபுரிந்தவர். இலங்கை வானொலியில் கவியரங்குகளிலும், பல சொற்பொழிவு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியவர். இலங்கை வானொலியின் ஈழத்து மெல்லிசைப் பாடல் ஒலிபரப்பில் இவரின் பல பாடல்கள் ஒலிபரப்பாகியுள்ளன.

இலங்கை வானொலி வெளியிட்ட 10 மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய L.P இசைத்தட்டில் இவரின் பாடலும் இடம்பெற்றுள்ளது. ''இதயத்தில் இனிமையை உணரவிட்டு'' என்ற இவரின் பாடலை இவர் கணவரான சங்கீத பூஷணம் L. திலகநாயகம்

போல் இசையமைத்துப் பாடியுள்ளார். நாடகத் துறையிலும் ஆர்வமுள்ள இவர் பல்கலைக் கழகத்தில் கல்விகற்றபோது நாடகமொன்றினை எழுதி நெறிப்படுத்தி அதில் தானும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை நிர்வாக சேவையின் 1-ம் தரநிலையில் கடமைபுரியும் இவர் உதவி அரசாங்க அதிபர், சமூக சேவை உதவிப்பணிப்பாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை உதவிப்பணிப்பாளர், பிரதிச் செயலாளர் (கல்வி) ஆகிய பதவிகளில் புத்தளம், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை என்று ஈழத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் பணியாற்றி தற்போது யாழ் மாவட்ட பதில் அரச அதிபராகப் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

இவர் எழுதிய பல்வேறு பாடல்களுள் பெண்ணின் விடியலை மையமாகக் கொண்டு எழுதிய ''போராடப் பிறந்த பெண்மை'', ''பெண்ணுக்கு வேண்டும் பெருமை'' போன்ற பாடல்கள் பெண்ணியல் பார்வையில் முன்னோடி முயற்சியென்ற முத்திரையைப் பதிக்கின்றது.

இவரது பல்துறை ஆளுமை நிறைந்த சேவை தொடர மகளிர் அபிவிருத்தி நிலையம் வாழ்த்துவதோடு இவரைக் கௌரவிப்பதில் மகிழ்கின்றது. □

● □ ● □ ●

## செல்வி திலகவதி பெரியதம்பி

பணிப்பாளர்- யாழ்.
கல்வித்திணைக்களம்

செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்வி அறிவு மிக்க குடும்பத்தின் மகளாகிய இவர் பருத்தித்துறை மெதடிஸ்ற் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார். போதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியான இவர் விவசாயத்தை தனது சிறப்புப் பாடமாகத் தெரிந்திருந்தார். ஐந்து வருடங்கள் ஆசிரியையாகச் சேவையாற்றிய பின் கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டு விவசாய வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டு, இப் பணியை 16 வருடங்கள் திறம்பட ஆற்றினார். வடமாகாணத்தின் கிராமப் பாடசாலைகளில் தனது கவனத்தைச் செலுத்தி கல்வி முன்னேற்றத்துக்காக அரும்பணி ஆற்றினார். இதற்கிடையில் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியையும் நிறைவு செய்து முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

கல்வி உலகில், மிக இள வயதிலேயே உயர் பதவிகளை வகித்து, உயர்ந்த இலட்சியத்துடன் வாழ்ந்து வரும் திறமைமிக்க பெண்மணியாக இவர் விளங்குகிறார். பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய பின், திருகோணமலை மாகாணக் கல்வி அமைச்சில் நான்கு வருடங்கள் மேலதிகக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, மீண்டும் யாழ்ப்பாணம் வலயம் 1-ன் பணிப்பாளராகத் தற்போது பதவி வகித்து வருகிறார்.

அயரா ஊக்கமும், நியாய சிந்தையும் கடமை உணர்வும் மிக்க இவர் மாணாக்கர்களது கல்வி அபிவிருத்தியில் மிகுந்த அக்கறை கொண்டு பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார். இவரது வழிகாட்டலின் கீழ் மாணவர் சமுதாயம் உன்னத இலட்சியங்களைக் கொண்ட அறிவு மிக்க சமுதாயமாக மலரும் என்பது எமது திண்ணம். இவரை மகளிர் அபிவிருத்தி நிலையம் கௌரவிப்பதில் பெருமை அடைகின்றது. □

● □ ● □ ●

## திருமதி கோகிலா மகேந்திரன்

**எழுத்தாளர்**

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் பகுதித் தலைவராகப் பணியாற்றும் இவர் விழிசிட்டி தெல்லிப்பளையில் 1950 ஆம் ஆண்டில் பிறந்தார். தற்போது இணுவிலில் வசித்து வரும் கோகிலா மகேந்திரன் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகவும், நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் தரத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவராகவும் விளங்குகின்றார். இதுவரை 20 இற்கு மேற்பட்ட கவிதைகள், 75 சிறுகதைகள், 5 நாவல்கள், 3 குறுநாவல்கள், 15 நாடகங்கள் எழுதியுள்ளமை இவரின் சிறந்த இலக்கியப் பணிச் சான்றாகவுள்ளது. இவரது படைப்புகளில் 'மனித சொரூபங்கள்' 'முரண்பாடுகளின் அறுவடை' 'அறிமுகவிழா' 'பிரசவங்கள்' போன்ற சிறுகதைத் தொகுதிகளும் 'துயிலும் ஒருநாள் கலையும்' 'தூவானம் கவனம்' நாவல்களின் மூலம் ஈழத்து இலக்கிய உலகில் முத்திரை பதித்தவர்.

இவரது 'பிரசவங்கள்' நூலுக்கு சாகித்திய மண்டல விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. நோர்வே தமிழ்ச்சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசையும் பேராதனைப் பல்கலைக்கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் சிறந்த நடிகைக்குரிய பரிசையும் (1974), நீர்ப்பாசனத் திணைக்களம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இருமுறை பரிசில்களையும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியிலும் சிறுகதைப் போட்டியிலும் பரிசில்களையும், ஆசிரியர் தினத்தை ஒட்டி கல்வித்திணைக்களம் நடாத்திய சிறுகதை, நாடகப் போட்டியில் பரிசில்களையும், துர்க்கா தேவஸ்தானம் நடாத்திய சமயபேச்சுப் போட்டியில் முதற் பரிசினையும் பெற்று தனது இலக்கிய ஆளுமையை வெளிக்காட்டி உள்ளார்.

சோலைக்குயில் அவைக் காற்றுக் கழகத்தின் தலைவராகவும், கலை இலக்கியக் கழகத்தின் செயலாளராகவும் பணியாற்றும் இவர் சமய இலக்கியக் கூட்டங்களில் சிறந்த பேச்சாளராகவும் விளங்குகின்றார். பெண்ணியம் தொடர்பான கட்டுரைகளையும், உளவியல் கட்டுரைகளையும் எழுதி தமிழுக்குப் புதுமை சேர்ப்பிக்கின்றார். நாடகத்துறையில் தொலைக்கல்வி ஆசிரியர்கட்கு நாடகத்தினைப் போதிக்கும் பகுதி நேர போதனாசிரியராகவும் தற்போது பணியாற்றும் இவர் பல்துறைகளிலும் சிறந்த ஆற்றல் வாய்ந்த பெண்மணியாக திகழ்கின்றார் இவரைக் கௌரவிப்பதில் மகளிர் அபிவிருத்தி நிலையம் பெருமை அடைகின்றது. □

# செல்வி. நவமலர் கனகரத்தினம்

பணிப்பாளர் - யாழ் போதனா வைத்தியசாலை

யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகக் கடமையாற்றும் செல்வி ந. கனகரத்தினம் அவர்களை யாழ் மாவட்டத்தின் சிறந்த பெண் மணிகளுள் ஒருவராகத் தெரிவு செய்து கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாகவும், மாணவியர் தலைவியாகவும் விளங்கிய இவர் அக் கல்லூரியில் இருந்து மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் மாணவி எனும் பெருமையையும் பெற்றவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்து 1965-ம் ஆண்டு வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்றார். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் வைத்திய சேவையாற்றிய பின் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றார். அதனைத் தொடர்ந்து யாழ் மாவட்ட நீதித்துறை வைத்திய அதிகாரியாகப் பணியாற்றி 1990-ம் ஆண்டு, யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகக் கடமையேற்றார்.

அமைதியான சுபாபமும், அன்பான பேச்சும், பண்பட்ட உள்ளமும் சேவை மனப்பாங்கும் கொண்ட இவர், இக்கட்டான இந்தக்கால கட்டத்தில், வைத்தியசாலையின் நிர்வாகப் பொறுப்பைக் கொண்டு நடாத்துவதற்கு முற்றிலும் பொருத்தமானவர், இடம் பெயர்ந்து அல்லலுற்று, சுகாதாரச் சீர்கேட்டினால் நிலைகுலைந்திருக்கும் மக்களுக்கு அயராது மருத்துவ சேவையாற்றி 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் குறிக்கோளுக்கமைய செயலாற்றி வருகிறார், மனித நேயத்தை மனத்தே இருத்தி மருத்துவத் தொண்டாற்றி வரும்இவரது சேவையை மனதாரப் பாராட்டுகின்றோம். □

# திருமதி. ஜெயதேவி கணேசமூர்த்தி

வைத்திய கலாநிதி
விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

ஜெயதேவி கணேசமூர்த்தி அவர்கள் யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியான இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்து 1965-ம் ஆண்டில் மருத்துவக் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு, பதுளை, மாத்தறை ஆகிய இடங்களில் மருத்துவ சேவையாற்றினார் பின்னர் இங்கிலாந்து சென்று 1978-ம் ஆண்டில் MRCP பட்டத்தைப் பெற்றார். 1981-ம் ஆண்டில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் ஆற்றி வருகின்றார்.

ஆழ்ந்த புலமையும், அயராமுயற்சியும் கொண்ட இவர் தான் பெற்றுள்ள மருத்துவ அறிவினை மாணாக்கருக்கு தெளிவாகக் கற்பிக்கும் ஆற்றல் கைவரப் பெற்றவர். மனித நல மேம்பாட்டை மையமாக வைத்து பணியாற்றி வரும் இவரது சேவை நமக்கெல்லாம் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அவரை இந்த நேரத்தில் கௌரவிப்பதில் நாம் பெருமை அடைகின்றோம்.

## செல்வி புஸ்பா செல்வநாயகம்

மலேசியா நாட்டில் மலர்ந்து ஈழநாட்டை நாடி வந்து முத்திரை பதித்தவர் செல்வி. புஸ்பா செல்வநாயகம் அவர்கள். சிறந்த கல்விமானாகவும் கல்வி அதிகாரியாகவும் விளங்கிய திரு. சி. செல்வநாயகம் அவர்களின் குமாரியாகிய இவர், யாழ். இந்து மகளிர் கல்லூரியினால் வடிவமைக்கப்பட்டவர். விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற இவர் இந்து மகளிர் கல்லூரியின் புகழ்பெற்ற ஆசிரியைகளின் வரிசையில் முன்னிடம் பெற்று விளங்கியவர்.

சமூகத்தொண்டும், சமயத்தொண்டும் இவர் விரும்பி மேற்கொண்ட தொண்டு நெறிகள், இலக்கியத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் சமய, கலாசாரம் சார்ந்த கருப்பொருட்களை மையமாக வைத்து கருத்தைக் கவரும் சொற்பொழிவுகளை ஆற்ற வல்லவர். கருத்தாழமும் இனிமையான ஓசை நயமும் அருவியின் அமைதியும் அவர் பேச்சு நடையின் முத்திரைகள், மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் சொற்பொழிவாற்ற சென்று வந்துள்ள இவர் அன்னையர் முன்னணியின் ஆரம்ப காலத்தில் இருந்து அதன் செயற்பாடுகளில் ஒன்றிணைந்து நிற்பவர்.

கோயிற்பணியைத் தனது குலப்பணியாகக் கொண்டு சமய வாழ்வில் மக்களை ஈடுபடுத்த உயராது பாடுபட்டு வருகிறார். சிறுமையை ஒறுத்து, எளிமையை அணைத்து அபலைப் பெண்களுக்கு ஆதரவு அளித்து வரும் இப்பெருமகள் தமிழ்ப் பண்பாட்டின் பிரதிநிதியாக விளங்கி நிற்பது கண்கூடு. சமுதாயத்தில் அல்லாவற்றை நலிவடையச் செய்து நல்லனவற்றை வளர்ச்சியடையச் செய்ய ஆக்கபூர்வமான முறையில் செயற்பட்டு வரும் இவரை வாழ்கவென வாழ்த்தி கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். □

## செல்வி தணிகைச் செல்வி

**பொறுப்பாளர்,**
**யாழ். மாவட்ட அரசியல்**
**மகளிர் பிரிவு**

'குட்டக் குட்டக் குனிந்தது போதும் என்று, குட்டுபவர்களை எதிர்த்து, தலை நிமிர்ந்து நின்று தாயகக் கனவை நனவாக்க, தமிழ் மக்கள் தற்கொடை செய்யும் காலம் இது. ஆண்களுடன் இணைந்து பெண்களும்' ஈழப் போராட்டத்தில் தம்மை இணைத்து போராடி வருவது சமகால வரலாற்றின் யதார்த்தம். பெண் இனத்தை ஒடுக்கிய சமூக, சமூதாய கலாசார வரையறைகளைத் தகர்த்தெறிந்து களம் கண்டு போராடி வரும் தமிழீழப் போராளிகளின், மாவீரர்களின் பிரதிநிதியாக அவர்கள் விளங்குகிறார். தீர்க்கமான அறிவும் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து பொருத்தமான முடிவு காணும் திறமையும் இவர்களிடம் மேலோங்கி இருப்பதைக் காணலாம். தலைவன் ஒருவனே எனக் கொண்டு அவன் வழியில் நடந்து தரணியில் தமிழ் அரசை நிலைநாட்டும் இலட்சிய தாகம் கொண்ட வேங்கைகளின் பிரதிநிதியான தணிகைச்செல்வி அவர்களே உங்கள் தீரத்துக்கு நாம் தலை சாய்க்கின்றோம். தமிழ் சமூகத்துக்கு தாங்கள் ஆற்றி வரும் சேவை அளப்பரியது. இலட்சியப் பாதையில் வெற்றி நடைபோட தங்களை வாழ்த்துகிறோம்.

போராட்டம், போராட்ட இலக்கியம், அரசியல் துறைகளில் முத்திரை பதித்தவர் தணிகைச்செல்வி. அடக்குமுறைக்கெதிரான உலக போராட்ட வரலாற்றில் தமிழீழத்தேசத்திற்கான பெண்களின் எழுச்சி ஆயுதமேந்திய புரட்சி தனித்துவத்துடன் பதிவுபெறும். இவ் அற்புத சக்தியின் பிரதியான தங்களைக் கௌரவிப்பதில் மகளிர் அபிவிருத்தி நிலையம் பெருமை கொள்கிறது. □

# போர்க் களத்திலிருந்து விளையாட்டுக் களம் வரை

போரோடு தொடர்பான விளையாட்டுப் பொருட்கள் இன்று அதிகரித்துள்ளது புதிதாக வெளிவந்துள்ள வீடியோ விளையாட்டுக்கள் வகையில் 85 சத வீதமானவை மூர்க்கத்தனமான தலைப்புகளைக் கொண்டவை. அராரி (Atari) எனும் வீடியோ விளையாட்டுப் படங்கள் தயாரிக்கும் நிறுவனத்தினரிடம், தமது போர் வலயத்தினை ஓர் விளையாட்டாசுபடம் எடுத்துத் தரும்படி போர்வீரர்கள் கேட்டபோது, கிறீன் சாம் சமாதான நிலையத்தின் பெண்கள் மோட்டார் சைக்கிளில் துரத்துவதுபோல படம் முழுவதும் காட்சி அமைக்கப்பட்டது இவ்வகை விளையாட்டுப் பொருட்களும், விளையாட்டுக்களும் தொலைச்காட்சி விளம்பரங்களும் கேலிச் சித்திர நிகழ்ச்சிகள் மூலமும் விளம்பரங்கள் மூலமும் ஊக்குவிக்கப் படுகின்றன.

இவற்றைப் பார்வையிடும் சிறுவர் தாமும் அதனைப்போலவே நடக்க முயல்கின்றனர். குழந்தைகட்குக் கொடுக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள் பெரியோரின் பெறுமானங்களோடு தொடர்புபடுகின்றன. போர் தொடர்பான விளையாட்டுப் பொருட்களோடு குழந்தைகளை ஈடுபட செய்வது முரட்டுத்தனமான நடவடிக்கைகள் அவர்கள் புரிவதை ஏற்பது போலாகும் என சிறகூஸ் பல்கலைக் கழக ஆய்வாளர் கலாநிதி ஆர்றோல்ட் கோல்ட்ரின் தெரிவிக்கின்றார்.

போர் தொடர்பான விளையாட்டுப் பொருட்கள் இனவாதம், பாலியல் ஊக்குவிப்பு போன்றவற்றைத் தூண்டுகின்றன. இவ்வாறான பல துர்நடத்தைச் செயல்கள் யாவும் வெளி நாட்டுடன் தொடர்புடையவையே. விளையாட்டுக் கருவிகள் காட்டப்படும் விதம், பயங்கரமான முகபாவங்கள், நிறங்களின் சேர்க்கை யாவும் சிறுவர் மனதில் பலவித தோற்றப்பாடுகளை உருவாக்குகின்றன. உதாரணமாக அராபிய நோமாட் பொம்மை, றம்போ விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றைக் கூறலாம். இவற்றைப் பார்க்கும் சிறுவர் வேறுபாடான தோற்றப்பாடு கொண்டவர்களை கெட்டவர்களாகவும், துர்நடத்தை புரிபவர்களாகவும் கருதுகின்றனர். இப்போ இளம் பெண்களை இராணுவ உடைகளில் வீராங்கனைகளாக சித்தரிக்கும் விளையாட்டுப் பொருட்கள் வரத் தொடங்கியுள. Mattel லினுடையபுதிய இராணுவ பாபி சந்தைக்கு வந்துவிட்டது. 1990-ல் இவ் பாபி கடற்படைத் தளபதிபோல உடையணிந்து காண்பிக்கப்பட்டது. இப்படியாக போர் விடயங்களில் இவை பெண்களையும் ஊக்குவிக்க ஆரம்பித்தன. இளம் பெண்கள் மனதில் இவை போராட்ட உணர்வுகளைத் தூண்டியுள. இவையாவும் சிறுவர், பெண்கள்

தொடர் மறுபக்கம்

# பால் வேறுபாடு என்றால் என்ன?

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் இருவகை வேறுபாடுகள் உள. அவை ஒன்று பாலுணர்வு (Sex) மற்றது பால் வேறுபாடு (gender) பாலுணர்வு ஆண் பெண் இடையில் நிலவும் உடலியல் தொடர்பான வேறுபாடாகும். மக்கள் ஆணாகவா பெண்ணாகவா பிறந்துள்ளனர் என்பதை இக் குறியீடு காட்டுகின்றது. பால் வேறுபாடு (gender) பாலுணர்வு போன்று உடலோடு தொடர்புடையதல்ல. பால் வேறுபாடு தாம் ஆண் / பெண்ணாக பிறந்ததால் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்புக்களோடு தொடர்புடையது. இவ் எதிர்பார்ப்புகள் பல வேறுபாடுடையது. ஆண்கள் பலசாலிகளாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதனால் அவர்களே டாக்டர்களாகவும், சட்டத்தரணிகளாவும் வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, பெண்கள் பலவீனமானவர்கள் ஆகையால் தாதிமாராகவும், தாயாகவும் வருகின்ற எதிர்பார்பபு, இதனாலேயே பெண்களுக்கு ஆண்களைவிட குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. பெண்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதில்லை. ஆண்கள் அடித்து துன்புறுத்துவதும் தாம் பலசாலி என்ற எதிர்பார்ப்பினாலேயே. பெண்கள் பல வகையிலும் ஆண்களுக்கு குறைந்தவர்களாகவே காட்டப்படுகின்றனர். ஆகவே தான் இன்று பெண்கள் அபிவிருத்தி என்ற பதம் வழக்கிலின்றி (gender & development) என்ற வார்த்தை உபயோகத்தில் வந்துள்ளது.

# எயிட்சும் - சர்வதேச பெண்கள் சமூகமும்:

'எயிட்ஸ்' தொடர்பாக நடத்தப்பட்ட 8-வது சர்வதேச மாநாட்டைத் தொடர்ந்து அம்ஸ்ரடாமில் (1992) ஜுலை மாதம் எயிட்ஸ் வைரஸ்சினால் பீடிக்கப்பட்ட பெண்களுக்கான ஓர் அமைப்பு (ICW) உருவாக்கப்பட்டது. பின்னர் விரைவாக வளர்ச்சியடைந்த இவ்வமைப்பு தனது தலைமை அலுவலகத்தை லண்டனுக்கு மாற்றிக் கொண்டுள்ளது.

எயிட்ஸ் நோயின் தாக்கத்திற்குட்பட்ட பெண்களுக்கு, இப்படியான ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு. இந்நோயினால் பீடிக்கப்பட்டோர், நிறுவனங்களில் குறைவாகவே அங்கம் வகிப்பதனால், இவர்களைப்பற்றிய பூரண தகவல்கள் கிடைப்பது அரிதாக உளது. 'எயிட்ஸ்' பாதிக்கப்பட்டோரில் பாதிப்பேர் பெண்களாக இருந்தும், இந்நோய் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் யாவும் ஆண்களை அடிப்படையாகக் கொண்டே நடத்தப்படுகின்றன. இதனால் பெண்களில் HIV வைரஸ் நோயின் இயற்கை வரலாறு பற்றிய அறிவு இன்னும் குறைவாகவே உளது. அடுத்து, எயிட்ஸ் தாக்கத்திற்குட்பட்ட அனேகமான பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவே வாழ்கின்றனர். தமது அந்தஸ்து, சமூகத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றனர். இவர்கட்கு ஆதரவும், உதவியும் தேவை. பல நாடுகளில் ஆண்களுக்கு இவ்வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஆனால் பெண்களுக்கு இவை கிடைப்பதில்லை. பெண்கள் நோயை கடத்துபவர்களாகவே கணிக்கப்படுகிறார்கள். இவர்களது நோயை குறைக்கும் சேவைகள், தேவைகள் கிடைப்பது இவர்கட்கு குறைவாகவே உளது.

இச்சர்வதேச அமைப்பின் தோற்றுவாய் 1990ம் ஆண்டில், மட்றிட்டில் நடந்த எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கட்கான நான்காவது சர்வதேச மாநாட்டையே சேரும். சிறு தொகையினரான பெண்கள் ஒன்றுசேர்ந்து தமது சர்வதேச தொடர்பை அதிகரிக்க விரும்பினர். இதன் விளைவாக எட்டாவது எயிட்ஸ் மாநாட்டிற்கு முன்னதாக இவ்வமைப்பின் அங்கத்தவர்கள் ஓர் மாநாட்டை அம்ஸரடாமில் கூட்டினர். இதில் 27 நாடுகளைச்சேர்ந்த 50 பெண்கள் கலந்துகொண்டு இவ்வமைப்பை உருவாக்கினர். ஆபிரிக்கா, ஐரோப்பா, லத்தின் அமெரிக்கா, கரிபியன், வடஅமெரிக்கா, ஆசிய பசுபிக் நாடுகளைச் சார்ந்த 16 பிரதேசங்களிலிருந்து பிரதிநிதிகள் இவ்வமைப்பிற்கு தெரிவு செய்யப்பட்டனர். லண்டனில் இதன் தொடர்பு நிலையம் செயற்பட ஆரம்பித்தது.

இவர்களது முக்கிய குறிக்கோள், எயிட்ஸ் நோயின் தாக்கத்திற்குட்பட்ட பெண்கள் தனிமைப்படுத்தப்படுவதை தடுத்தலும், இவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இவர்களை விழிப்படையச் செய்தலுமாகும்.

இவ்வமைப்பு அங்கத்தவர்கள் ஒன்றுசேர்ந்து ஓர் சஞ்சிகையினை வெளியிடவும். அத்துடன் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பெண்கள் கல்வி, தடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர்.

இவ்வமைப்பு வளர்முக நாடுகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தவுள்ளது. தற்போது 35 நாடுகளிலிருந்து 70 அங்கத்தவர்கள் அங்கத்தவராக உள்ளனர். பேர்லினில் நடக்கவிருக்கும் 9-வது மாநாட்டின் பின்னர் தமது அங்கத்தவர்களை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் இவ்வமைப்பு ஈடுபடவுள்ளது.

தொடர்பு:- The Internationol Community of Women Living With HIV / AIDS
Po- Box 2338
London W 8 42 G
United Kingdom

Globail AIDS News.

---

(35ம் பக்க தொடர்)

போன்றோரின் உணர்வுகளில் பாரதூரமான பாதிப்பினை ஏற்படுத்தியுள. இவற்றின் தாக்கங்களை மக்கள் இன்று அறியத் தொடங்கியுள்ளதோடு, உலகின் பல் நாடுகளிலும் இப்போர் விளையாட்டுப் பொருட்களின் பாவனைக்கு எதிராக குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள. சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளில் இவ்வகை விளையாட்டுப் பொருட்களுக்குத் தடையே விதிக்கப்பட்டுள்ளது.

Listen Real Loud.

*With best Compliments from:*

*For all your optical requirements*

JUST STEP INTO

**S·M·FERNANDO**



SPECIALISTS IN HANDLING THE
LATEST TECHNOLOGY IN OPTICAL WORK

**EYES SKILFULLY TESTED AND THE RIGHT
LENS FOR THE RIGHT VISION CHOSEN**

## S. M. FERNANDO

**58o, HOSPiTAL ROAD,**
(NEAR BANK OF CEYLON)

JAFFNA


மகளிர்
நடாத்தும்